பக்கங்கள்: 20 விலை:20 ரூபா


# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 05, சனிக்கிழமை 18.02.2017 கதிர் 105

மீண்டும் புதுப் பொலிவுடன்
சாறிகளின் சாம்ராஜ்யம்
சரவணா
ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

## இயலாமையின் விளைவே கால நீடிப்புக்கு இணக்கம்

# ஏமாந்தார் சம்பந்தன்!



## சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆதங்கம்

– எஸ்.நிதர்ஷன் –



யாழ்ப்பாணம், பெப்.18

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுதல், பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்களில் சம்பந்தனின் சாணக்கிய முயற்சிகள் தோற்றுப்போய் விட்டன. அவர் ஒன்றில் ஏமாற்றப்பட்டிருக்கின்றார். இல்லையேல் அவரது இராஜதந்திர முயற்சிகள் பலிக்காமல் போய் விட்டன.**

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் அங்கு கூறியவை வருமாறு:-

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 34ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

பக்கம் 18 »

## தமிழ்க் கூட்டமைப்புக் குறித்து சுரேஷ் கேள்வி
## யார் வெளியேறுவது? யாரை வெளியேற்றுவது?

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப்.18

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிலிருந்து யார் வெளியேறவேண்டும்? யாரை வெளியேற்ற வேண்டும்? கூட்டமைப்பை பிழையான பாதையில் வழி நடத்திக்கொண்டிருப்பவர்கள் கூட்டமைப்பிலிருந்து வெளியேறுவதா? அல்லது பிழையாக வழி நடத்துவோர் கூட்டமைப்பில் இருக்க ஏனையவர்கள் அவர்களை விட்டு வெளியேறுவதா?

- இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியானஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

'தமிழ்க் கூட்டமைப்பில் ஒரு

பக்கம் 18 »

## தமிழரசுக் கட்சியின் தீர்மானங்களை கூட்டமைப்பு முடிவாக அறிவிக்காதீர்!
### சம்பந்தன், சுமந்திரனிடம் சுரேஷ் வேண்டுகோள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப்.18

"தமிழரசுக் கட்சியின் தீர்மானங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவாக அறிவிக்காதீர்கள்!"

– இவ்வாறு சம்பந்தன் மற்றும் சுமந்திரனிடம் பகிரங்கக் கோரிக்கையாக முன்வைத்திருக்கின்றார் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

நேற்று யாழ்ப்பாணத்தில் தாம்

பக்கம் 18 »

## இணைப்புக்கு இணங்கவே முடியாது!
### முஸ்லிம்களின் நிலைப்பாடு அதுவென ஹக்கீம் திட்டவட்டம்



கொழும்பு,பெப்.18

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் போன்றவர்கள் எந்தவிதமான ஆர்ப் பாட்டத்தை மேற்கொண்டாலும் வடக்கையும் கிழக்கையும் இணைக்க முடியாது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெறுவதற்கான பேச்சுக்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தமது கட்சி ஈடுபட்டு வரும் நிலையில் நாடாளுமன்ற

பக்கம் 17 »

## கேப்பாபிலவு விவகாரத்தை ஆயர்கள் பேரவை ஆராயும்



யாழ்ப்பாணம், பெப்.18

முல்லைத்தீவு, கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு மக்களின் அறவழிப்போராட்டம் தொடர்பில் இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையில் ஆராயப்பட்டு முடிவுக்கு வலியுறுத்தப்படும் என்று யாழ். ஆயர் வண.யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் தெரிவித்திருக்கின்றார்.

பக்கம் 17 »



## எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் தயார்!

உள்ளூராட்சி அமைப்புக்களின் எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அரச அச்சகத்துக்கு அனுப்பி வைப்பதற்காக அதனை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர்

பக்கம் 17 »

## துப்பாக்கிச் சூட்டு எச்சரிக்கை!
## கேப்பாபிலவில் புதிய அறிவித்தல்



தங்கள் நிலங்களை மீட்கக் கோரி கேப்பாபிலவு மக்கள் போராட்டம் நடத்தி வருகையில், அவர்களின் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலத்தை அண்டிய பகுதியில் *'தேவையில்லாமல் உட்சென்றால் துப்பாக்கிச் சூடு நடத்தப்படும்'* என்ற எச்சரிக்கைப் பலகை – தமிழ் எழுத்துப் பிழைகளுடன் – நேற்று

பக்கம் 17 »

## விக்கியின் பேச்சுக்கு மறுபேச்சு பேசவே இயலாத அரசு இது!
### கூட்டு எதிரணியின் கெஹலிய கூச்சல்



வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் பேச்சுக்கு இந்த அரசாங்கம் மறுபேச்சுப் பேசுவதில்லை என கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

மேலும், சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும்

பக்கம் 18 »

அளப்பு அருணாசலம்



அப்ப... நம்ப நடக்கிறோம், நம்பி நடக்கிவில்லை எண்டு சொல்லிச் சினமே.....!

## முதல்வருக்கு நெஞ்சுவலி ஆஸ்பத்திரியில் ஓய்வு



வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் நெஞ்சுவலி மற்றும் நெஞ்சு அசௌகரியம் காரணமாக நேற்று முன்தினம் இரவு திடீரென யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

பக்கம் 17 »

# கேப்பாபிலவு மண் மீட்புக்கு விரைவில் தீர்வு வழங்காவிடில் பெரும் போராட்டம் வெடிக்கும்

## எச்சரிக்கிறது ஜே.வி.பி.



முல்லைத்தீவு - கேப்பாபிலவு மக்களது மண்மீட்புப் போராட்டத்துக்கு விரைவில் உரிய தீர்வு வழங்கப்படா விட்டால், வடக்கு, கிழக்குதழுவிய ரீதியில் பெரும் போராட்டம் வெடிக்கும் சாத்தியம் காணப்படுகின்றது எனஜே.வி.பி. எச்சரிக்கை விடுத்துள்ளது.

கேப்பாபிலவு மற்றும் புதுக்குடியிருப்புபகுதியில்நிலமீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை நேரில் சென்று சந்தித்து தமது ஆதரவைத் தெரிவித்த ஜே.வி.பி. கட்சியின் மத்திய குழு உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜே.வி.பி.கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசின் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன கேப்பாபிலவு மக்களது காணி விடுவிப்பு குறித்து வெளியிட்டுள்ள கருத்து குறித்து கண்டனம் வெளியிட்ட இராமலிங்கம் சந்திரசேகரன், அந்த மக்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு கடந்த 8 வருடங்களுக்கும் மேலாக போராடி வருகின்றனர் என்று சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

அந்தக் காணிகள் தொடர்பாக அரசு மாறுபட்ட கருத்துக்களை வெளியிடுகின்றது எனத் தெரிவித்த அவர், 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் தாங்கள் வசித்த தமது காணிகளை மீள வழங்குமாறு கேப்பாபிலவு மக்கள் வலியுறுத்துகின்றனர்.

இதேவேளை, காணி விடுவிப்புக் குறித்து இராணுவத்திடம் கேட்டபோது உயர் அதிகாரிகள் அனுமதித்தால் காணிகளை விடுவிப்பதற்குத் தாம் தயார் என்று தெரிவித்தனர்.

இந்தக் காணிப்பிரச்சனை ஓர் அரசியல் பிரச்சினை. இதற்கு அரசியல் ரீதியில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். அத்துடன் கேப்பாபிலவு மக்களது காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறாம். இதேவேளை, இந்த கேப்பாபிலவு போராட்டம் என்பது நில மீட்புப் போராட்டங்களின் திருப்பு முனையாக அமைய வேண்டும் என்பதே எமது விருப்பம்.-என்றார். (எ)

# கிழக்குப் பல்கலை மாணவர்களும் கேப்பாபிலவு மக்களுடன் சந்திப்பு

புதுக்குடியிருப்பு, பெப்.18

கேப்பாபிலக் குடியிருப்பு மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்றைய தினம் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்ட இடத்துக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

கேப்பாபிலவு மக்களின் நியாயமான போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதற்காகவே தாம் நேற்று கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து இங்கு வந்தோம் என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகத்தில் இராணுவம் நிலைகொண்டுள்ள பொது மக்களின் காணிகளை அரசு விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-81)



# வறட்சியால் பாதித்த குடும்பங்களுக்கு ரூ.10 ஆயிரம் நிவாரணக் கொடுப்பனவு

கொழும்பு, பெப்.18

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயக் குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கப் படவுள்ளது.

மேற்படிக் கொடுப்பனவு மார்ச் மாதம் முதல் வழங்கப் படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், வறட்சியால் 13 மாவட்டங்களில் விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தன.

குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு நீரை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ அமைச்சு அண்மையில் தகவல் வெளியிட்டிருந்தது.

இதேவேளை, நெற் செய்கையை மேற்கொள்ள முடியாமற்போயுள்ள விவசாயிகளை வேறு பணிகளில் அமர்த்தி கொடுப்பனவை வழங்கவும் நடவடிக்கை எடுப்பதாக இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# கேப்பாபிலவு மக்களின் பிரச்சினைக்கு இழுத்தடிப்புச் செய்யாது தீர்வு வழங்குக


## யாழ். மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வலியுறுத்து

கேப்பாபிலவு பிலக் குடியிருப்பு மக்களின் போராட்டத்தை இழுத்தடிக்காது அரசு தீர்வை வழங்க வேண்டும். இந்தப் போராட்டத்துக்கு யாழ். மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் கேப்பாபிலவு பிலக்குடியிருப்புக்கு பயணம் மேற்கொண்டுள்ள நீதி சமாதான ஆணைக் குழுவின் தலைவர் அருட்தந்தை மங்களராஜா இவ்வாறு தெரிவித்தார்.

18ஆவது நாளாக மக்களின் போராட்டம் தீர்வின்றித் தொடரும் நிலையில் எதற்காக தொடர்ந்தும் அரசு இழுத்தடிப்புச் செய்கின்றது என்று தெரியவில்லை என்றார் அருட்தந்தை.

அதேசமயம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்ட அனைவரும் கொட்டும் பனியிலும், வெயிலிலும் போராட்டத்தைத் தொடர்கின்றனர். அவர்கள் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் அவர் வேதனையுடன் கூறினார். (எ)




# குடாநாட்டில் போசாக்கு குறைபாட்டை நீக்க சுகாதார அமைச்சு விசேட நடவடிக்கை

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் போசாக்கு இன்மையை குறைப் பதற்கான நடவடிக்கைகள் சுகாதார அமைச்சால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில்போசாக்குக்குறைபாடான இடங்களை இனம் கண்டு அந்தப்பகுதி மக்களின் போசாக்குத் தன்மையை அதிகரிப்பது குறித்து ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

போசாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டவர்களை இனம் கண்டு உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அவர்களின் போசாக்கு இன்மையை நீக்கு வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே இந்தக் கூட்டத்தின் மிக முக்கியமான கருப்பொருளாகக் காணப்பட்டது.

இதேவேளை யாழ்.மாவட்டதில் நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் சங்கானை ஆகிய ஐந்து பிரதேச செயலர்கள் பிரிவுகளில் போசாக்குக் குறைபாடுகள் உள்ள பிரதேசங்களாக இனம் காணப்பட்டுள்ளன. அந்த இடங்களில் போசாக்கை மேம்படுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

மேலதிக அரச அதிபர் செந்தில்நந்தனன் மற்றும் துறைசார் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். (எ)

# மகளிர் கழக அங்கத்தவர்களுக்கு பல்வேறு போட்டி நிகழ்வுகள்

எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ள சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் மகளிர் கழக அங்கத்தவர்களுக்கான விளையாட்டு மற்றும் திறன் ஆய்வுப் போட்டிகள் இன்றும் நாளையும் சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையத்தில் இடம்பெறவுள்ளன.இந்த நிகழ்வுகள் வயது அடிப்படையில் இரு பிரிவுகளில் இடம்பெறும்.நிகழ்வில் கிடுகு பின்னுதல், தேங்காய் துருவுதல்,மாலை கட்டுதல்,கோலம் போடுதல் போன்ற பாரம்பரிய போட்டிகளும் ஓட்டம், தடைதாண்டல் போன்ற விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-21)

# மன்னார் நீர்த் தாங்கியில் திருத்த வேலை; பௌஸர் மூலம் நீர் விநியோகிக்க நடவடிக்கை

மன்னார், பெப்.18

மன்னாரில் நீர்த்தாங்கியில் திருத்த வேலை காரணமாக பாதிப்புக்குள்ளானவர்களுக்கு பௌஸர் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடி காலமைப்புச்சபையால் முன்னெடுக்கப்படுகின்ற உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதாரத் திட்டத்துக்கு அமைவாக மன்னார் நகரில் உள்ள நீர்த்தாங்கியில் திருத்த வேலை நடைபெறுகின்றது.

எனவே எழுத்தூர் மற்றும் பள்ளிமுனை நீர்த்தாங்கிகளிலிருந்து மாத்திரம் நீர் விநியோகம் மேற்கொள்ளப் படுகின்றது. அதனால், நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படும் நீர் விநியோகத்தின் பாய்ச்சல் வேகம் மன்னார் நகரப் பகுதியில் குறைவாகக் காணப்படும்.

இதன்காரணமாக நீர் விநியோகம் முற்றாக பாதிக்கப்படும் பாவனையாளர்களுக்குப் பௌஸர் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-112)

# எல்லை நிர்ணயம் தொடர்பிலான வர்த்தமானி அறிக்கை கையளிப்பு

கொழும்பு, பெப்.18

எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை, அரச அச்சகத்துக்கு அனுப்பிவைப்பதற்காக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா, அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறியிடம் கையளித்துள்ளார்.

இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று நண்பகல் அமைச்சில் வைத்து, அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (எ)



# வவுனியா வளாகத்தை பல்கலைக்கழகமாக தரமுயர்த்தக் கோரி பெப்.28 இல் ஊர்வலம்

## பல அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு



வவுனியா,பெப்.18

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை வன்னிப் பல்கலைக்கழகமாக மாற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதை வலியுறுத்தி வவுனியாவில் எதிர் வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஊர்வலம் ஒன்றும் நடத்தப்படவுள்ளது.

வவுனியா வளாக ஆசிரியர் சங்கம், வவுனியா வளாக ஊழியர்சங்கம்,மாணவர்சங்கங்கள், வவுனியாபொதுஅமைப்புக்கள் என்பன இணைந்து இந்த ஊர்வலத்தைஏற்பாடுசெய்துள்ளன.

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் கடந்த 25 வருடங்களாக வளாகமாகவே செயற்படுகின்றது. இதை வன்னிப் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப்பலதடவைகள் கோரிக்கைகள் விடுக்கப்பட்டும் அதுநிறைவேற்றப்படவில்லை.

இந்தநிலையில், அதுதொடர்பாக ஆராயும் கூட்டம் ஒன்று நேற்று வவுனியா பூங்கா வீதியில் உள்ள வவுனியா வளாகத்தின் நிர்வாகக் கிளை கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வவுனியா வளாகத்தைப் பிரதிநிதிப்படுத்தும் சங்கங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத்தலைவர்கள்எனப் பலர் கலந்துகொண்டனர். மேற்படி கலந்துரையாடலின் போதே ஊர்வலம் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

இந்த ஊர்வலம் வவுனியா வளாகத்தின் குருமன்காடு பிரயோக விஞ்ஞான பீடத்தில் எதிர் வரும் 28 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆரம்பித்து நகர் வழியாக சென்று வவுனியா அரசாங்க அதிபரிடம் ஜனாதிபதிக்கான மகஜர் கையளிக்கப்படவுள்ளது. (ம-100)

# மன்னார் மருதமடு அன்னையின் புதிய ஆலயம் இன்று திறப்புவிழா

மன்னார், பெப்.18

மன்னார்மறைமாவட்டத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மருத மடு அன்னையின் ஆலயம் இன்று சனிக்கிழமை மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர்மேதகு யோசப்கிங்ஸிலிசுவாம்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இலங்கையின்ஏனையமறை மாவட்ட ஆயர்களும் இந்த நிகழ்வில் இணைந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில்மன்னார்மறை மாவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளிலிலும்இருந்துபெருந்தொகையான பக்தர்கள் கலந்துகொள்வார்கள் எனவும், அதற்குஏற்றவகையில்போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திறப்புவிழாவில் தென்பகுதியில் இருந்து அரசியல் பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்டி விழாவை முன்னிட்டு ஆலயத்தில் கடந்த மூன்று தினங்களாக முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் கூறப்படுகின்றது. (ம)

# காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த மாணவி கிளி. வைத்தியசாலையில் உயிரிழப்பு

## டெங்குக் காய்ச்சல் எனச் சந்தேகம்

கிளிநொச்சி, ஜெயந்தி நகரைச் சேர்ந்த 17 வயதுடைய செ.ரஜிதா என்ற மாணவி ஒருவர் சில நாள்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார்.

டெங்குக் காய்ச்சல் காரணமாகவே இவர் உயிரிழந்திருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. எனினும் மரணத்திற்கான காரணத்தை அறிந்துகொள்ள அவரது இரத்த மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மேற்படி மாணவி காய்ச்சல் காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி பொது மருத்துமனையில் சிகிச்சை பெற்றார் எனக் கூறப்படுகின்றது. காய்ச்சல் குணமாகிய நிலையில், நேற்று முன்தினம் திடீரென கை, கால்கள் உளைவு காரணமாக மீண்டும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை அவர் உயிரிழந்தார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது டெங்கு நோய்வேகமாகப்பரவிவருவதால் மக்கள் நுளம்புப் பெருக்கம் ஏற்படாத வகையில் சுற்றுச் சூழலை வைத்திருக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும், நோய்நிலைஏற்பட்டால் உடனடியான மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-70)

# ரயில் மோதிய படைச்சிப்பாய்களை காப்பாற்ற முயன்றவர்களுக்கு பாராட்டு

## சாவகச்சேரி படை முகாமில் நேற்று இடம்பெற்றது



அரியாலை - நெடுங்குளம் ரயில் விபத்தில் படுகாயமடைந்த படைச் சிப்பாயைக் காப்பாற்ற முன்னின்று உழைத்த தமிழ் இளைஞர்கள்8பேரைபடையினர் நேற்றுக் கௌரவித்தனர். சாவகச்சேரியில் உள்ள 523 ஆவது படைப்பிரிவில்இந்தக்கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

கடந்த 9 ஆம் திகதி சாவகச்சேரி படை முகாமைச் சேர்ந்த படையினர்இருவர்பயணித்துக்கொண்டிருந்த பிக்அப் வாகனம் நெடுங்குளம் ரயில் கடவையில் ரயில் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரு படைச்சிப்பாய் பலியானார்.

மற்றையவர் படுகாயமடைந்த நிலையில்யாழ்.போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் உயிரிழந்தார். மேற்படி படையினர் உயிருக்காகப் போராடிய போது அவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சை வழங்கியதுடன் காயமடைந்த சிப்பாயை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் பணியிலும்அப்பகுதியைச்சேர்ந்த இளைஞர்கள் முன் னின்று செயற்பட்டனர்.

இவ்வாறு செயற்பட்ட 8 இளைஞர்களையே படையினர் கௌரவித்தமையுடன் பரிசுப்பொருள்களையும் வழங்கினர். யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மகேஷ் சேனநாயக்கவின் ஏற்பாட்டில் 523ஆவது படைத் தளபதி திசா நாயக்கவின் தலைமையில் மேற்படி நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது 523 ஆவது படைத்தளபதிதிசாநாயக்ககருத்து



வெளியிடுகையில்–

இந்த இளைஞர்கள் இனம், மொழிபாராதுசெயற்பட்டுள்ளனர். இரு படை வீரர்களும் விபத்தில் உயிரிழந்தபோதிலும்அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல் எண்ணம் பாராட்டுதற்குரியது. இவ்வாறான சம்பவங்களே தமிழ்–சிங்களஉறவுக்குஇடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்.

நாங்கள் தமிழர்களுக்கு உதவி செய்யத்தயாராக இருக்கின்றோம். அதேவேளை, தமிழர்களுக்கு உதவி செய்யக் கடமைப்பட்டும் இருக்கிறோம். –என்றார். (ம-21)

# புதுக்குடியிருப்பில் நேற்று கஞ்சாவுடன் ஒருவர் கைது

புதுக்குடியிருப்பு, பெப்.18

முல்லைத்தீவு –புதுக்குடியிருப்பு – மந்துவில் பகுதியில் 14.250 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று மாலை 5.30 மணியளவில் மந்துவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கஞ்சாவுடன் அந்த நபர் அகப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவரும்பொலிஸார் சந்தேக நபரைத் தாம் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர் எனத் தெரிவித்தனர். (ம-81)

# கலப்புப் பொறிமுறை ஆஸியிலிருந்து வற்புறுத்தல்

தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக்குற்றங்கள் பற்றிய விசாரணையின் போது சர்வதேச நீதிபதிகள் மற்றும் வழக்குத் தொடருநர்களை இலங்கை ஈடுபடுத்த வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆஸ்திரேலிய இயக்குநர் எலைனி பியர்ஸன் அம்மையார் வற்புறுத்தியுள்ளார்.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்திருந்த சமயமே கலப்பு பொறிமுறை விசாரணையை வலியுறுத்தும் விதத்தில் இந்தக் கருத்து வெளியிடப்பட்டது.

# அரிசிக்கு இன்றுமுதல் விலை நிர்ணயம்

இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு அரிசி வகைகளுக்கு அரசாங்கம் விலை நிர்ணயம் செய்துள்ளது. இந்த விலைகள் இன்றுமுதல் அமுல்படுத்தப்படும்.

அரசு அறிவித்துள்ள ஆகக் கூடிய சில்லறை விலைகள் வருமாறு,

இறக்குமதி செய்யப்பட்ட நாட்டரிசி கிலோ ஒன்று 72 ரூபா, இறக்குமதி செய்யப்பட்ட தவிட்டரிசி கிலோ ஒன்று 70 ரூபா, இறக்குமதி செய்யப்பட்ட சம்பா அரிசி கிலோ ஒன்று 70 ரூபா.

உள்நாட்டு நாட்டரிசி கிலோ ஒன்று 80 ரூபா, உள்நாட்டு தவிட்டரிசி கிலோ ஒன்று 78 ரூபா, உள்நாட்டு சம்பா அரிசி கிலோ ஒன்று 90 ரூபா. (ம)

# நியூஸிலாந்துக்கு செல்ல முயன்ற எண்மர் கைது

நியூஸிலாந்துக்குக் கடல் மார்க்கமாகப்படகில்சட்டவிரோதமாகப்பயணமாகமுற்பட்டவர்கள் என்ற சந்தேகத்தில் எட்டுப்பேரை நேற்று நீர்கொழும்பு பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் நீர்கொழும்பு,மாரவில,கல்முனை மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# சந்திரிகா ஏற்பாடு செய்த செயலமர்விற்கு அனுமதி வழங்க ஜனாதிபதி பின்னடிப்பு

## சு.க. உறுப்பினர்கள் சிலர் விரும்பவில்லையாம்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட அரசியல் செயலமர்வுக்குஅனுமதிவழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனபின்னடித்துவருகிறார் என தென்னிலங்கை அரசியல் வட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

சிறிலங்காசுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் குழுவுக்கான செயலமர்வு ஒன்று முன்னாள் ஜனாதிபதிசந்திரிகாவினால்ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த வார இறுதியில் மேற்படி அரசியல் செய லமர்வு இடம்பெறும் எனக் கூறப்பட்டது.

உள்ளூர் பொருளாதார நெருக்கடி மற்றும் சர்வதேச பொருளாதார நிலைமைகள் தொடர்பில் மத்திய வங்கி ஆளுநரும், அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்பேராசிரியர்ஜயம்பதி விக்ரமரத்னவும் இந்தசெயலமர்வில் கருத்துரையாற்ற இருந்தனர்.

இந்த செயலமர்விற்குஉறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பு வெளியிட்டனர்எனவும்அதனால்அது இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான ஜயம்பதி விக்ரமரத்னவின் ஆலோசனையை பெற்றுக்கொள்வது சிறிலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களை அவமானப்படுத்தும் வகையில் உள்ளது என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஜனாதிபதிக்கு அறிவித்தார் எனக் கூறப்படுகின்றது.

இதனால், முன்னாள்ஜனாதிபதியின் மேற்படி செயலமர்விற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதுவரை அனுமதி வழங்கவில்லை எனத் தெரிய வருகின்றது. (ம)

# மாணவருக்கு போதைவஸ்து விற்ற இளம் ஆசிரியை கைது!

கேரள கஞ்சா மாத்திரைகள் மற்றும் போதைவஸ்துகளை பாடசாலைச் சிறார்களுக்கு விற்றார்கள் என்ற சந்தேகத்தில் சர்வதேசப் பாடசாலை ஒன்றில் ஆசிரியையாகப் பணிபுரியும் 23 வயது யுவதி ஒருவரும் கந்தானைப்பகுதியைச்சேர்ந்தமற்றொருவரும் விசேட அதிரடிப் படையினரால்கைதுசெய்யப்பட்டனர்எனஅறிவிக்கப்படுகின்றது.

மேற்படி ஆசிரியையும் சம்பந்தப்பட்ட நபரும் நீண்ட காலமாக மாணவருக்குப் போதைப் பொருள்களை விற்று வந்தனர் என்று விசாரணையில் அறிய வந்ததாகப்பொலிஸார்தெரிவித்தனர்.

மேற்படிநபர்கைது செய்யப்பட்டமையை அடுத்து கேரளக் கஞ்சா மாத்திரைகள்பலவும்ஒரு கிலோ கேரளக் கஞ்சாவும் 920 மில்லிக்கிராம் ஹெரோயினும் அந்த நபரின் வீட்டிலிருந்தும் –

மேலும் ஒரு தொகுதி போதைப் பொருள்களும் ஒன்பது வாள்களும் சம்பந்தப்பட்ட ஆசிரியை வீட்டிலிருந்தும் – மீட்கப்பட்டனவாம்.

இருவரும் ஒரு மாத்திரை 400 ரூபா என்ற அடிப்படையில் அவற்றை மாணவர்களுக்கு விற்பனைசெய்து வந்திருக்கின்றார்கள்.

நேற்று அவர்கள் இருவரும் நீர்கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## கூட்டமைப்பின் விளக்கம் என்னவோ?

**இலங்கைத் தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகளாக இப்போது இலங்கை அரசுத் தரப்புகளுடன் பேசுபவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே. வாக்குகள் மூலம் அதற்கான ஆணையைத் தமிழ் மக்களிடம் பெற்றவர்கள் அவர்கள்தான். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை.**

ஆயுதப் போராட்டம் உச்சமடைந்திருந்த ஒரு காலத்தில் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக சர்வதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலுமான ஊடாட்டங்களில் விடுதலைப் புலிகள் பங்கு பற்றியிருந்தனர். புலிகளின் அந்த ஏகப்பிரதிநிதித்துவத்தை இலங்கைத் தமிழர்களின் இன்றைய தலைவராக இருக்கும் சம்பந்தன் ஐயா உட்படக் கூட்டமைப்பினர் ஒட்டுமொத்தமாக அனைவருமே அப்போது அதனை அங்கீகரித்திருந்தனர். ஆனால், அந்த ஏகப்பிரதிநிதித்துவ உரிமை - அல்லது அதற்கான மக்கள் ஆதரவு - புலிகளுக்கு வாக்குகள் மூலமோ, ஜனநாயக ரீதியிலான தேர்தல் நடவடிக்கை வாயிலாகவோ கிடைத்தது அல்ல. தங்கள் யுத்த வெற்றிமூலம், ஆயுதப் பலம் வாயிலாக அவர்களாகவே சுவீகரித்துக்கொண்ட நிலைமை அது.

ஆனால், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் முக்கிய பிரதிநிதிகள் என்று - இன்னும் கொஞ்சம் விரிவுபடுத்தப்போனால் ஏறத்தாழ, பெரும்பாலும் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று - கருதப்படவும், அழைக்கப்படவும், கையாளப்படவும் கூடிய நிலையில் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திகழ்கின்றது என்றால் அதற்குக் காரணம் புலிகள் சுவீகரித்தமை போன்ற ஆயுதப் பல மும் இராணுவ வெற்றியுமல்ல. மாறாக, மக்களின் வாக்குப் பலமும், தேர்தல் வெற்றியும்தான்.

மக்களின் வாக்குப் பலம் மூலம் - தேர்தல் வெற்றிகள் வாயிலாக - அந்தப் பிரதிநிதித்துவ வலுவைப் பெற்றுக்கொண்டு, அதன் அடிப்படையில் முன்னிலை பெற்று, செயற்படுபவர்கள், அந்த நிலைமையைத் தங்களுக்கு வழங்கிய மக்களுக்குப் பொறுப்புச் சொல்பவர்களாக - பதில்கூறக் கடமைப்பட்டவர்களாக - உள்ளனர் என்பது மறுக்கக்கூடியதல்ல.

அந்தவகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இன்றைய பொறுப்பு, கடப்பாடு மிக உயர்ந்தது.

தமிழ் மக்களின் ஆணை பெற்ற கூட்டமைப்புக் குறித்து தெளிவான,வெளிப்படையான,திட்டவட்டமானகுற்றச்சாட்டுக்களை அடுக்குகின்றார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

கூட்டமைப்பு தமிழ் மக்களுக்குப் பெரும் துரோகம் இழைத்துவிட்டமை சந்தேகத்துக்கு அப்பால் அம்பலமாகியிருப்பதாக அவர் கூறுகின்றார்.

தமிழர்களின் இறையாண்மையைக் கைவிட்டு, சமஷ்டியை விட்டுக்கொடுத்து, தமிழர்களின் அரசியலை ஒற்றையாட்சி என்று முட்டுச்சந்துக்குள் முடக்கிவிட்டது கூட்டமைப்பு என்பது கஜேந்திரகுமாரின் நேரடிக் குற்றச்சாட்டு.

கஜேந்திரகுமார் சொல்வது எப்படியும் இருந்துவிட்டும் போகட்டும். ஆனால், வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போது "நாங்கள் தமிழரின் இறையாண்மையின் அடிப்படையில் தீர்வைத் தாருங்கள் என்று வலியுறுத்தலாம். ஆனால், அதைக்கூட நாம் கேட்கவில்லை." - என்ற சாரப்பட கூட்டமைப்பின் பேச்சாளரும், கூட்டமைப்பு சார்பில் தீர்வு நடவடிக்கைகளில் உத்தியோகபூர்வமாகப் பங்குபற்றுபவருமான சுமந்திரன் கூறியிருந்தார் என்பது உண்மையே. அதற்கான வீடியோப் பதிவு ஆவணங்களை நாடாளுமன்ற இணையத்தில் பார்க்க முடியும்.

அதேசமயம், சமஷ்டிக்கு மாற்றான வேறு கட்டமைப்பை தாங்கள் பரிசீலிக்கத் தயாரென பி.பி.ஸி. சந்தேசியவுக்கு சுமந்திரன் கூறினாரெனக் குறிப்பிடுகின்றார் கஜேந்திரகுமார்.

"சமஷ்டிக்கு மாற்றீடாக நமது தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய கட்டமைப்பை முன்வையுங்கள், அதைப் பரிசீலிக்கலாம்." - என்று மட்டுமே சுமந்திரன் கூறினார். அதன் அர்த்தம் சமஷ்டியைக் கைவிடுவதல்ல, தீர்வு யோசனைக்கான பந்தை தென்னிலங்கை அரசின் களத்துக்குள் அடிப்பதுதான் அது என்று வேறு சிலர் சுமந்திரனின் கருத்துக்கு வியாக்கியானம் கூறுகின்றார்கள்.

எது, எப்படியென்றாலும், மிக 'சீரியஸான' விடயம் குறித்து மிகமிக 'சீரியஸான' குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். கடந்த தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டவராக அவர் இருக்கலாம். மிகமிக நேர்மையான முறையில் நடத்தப்பட்ட தேர்தலில், மிக முன்னிலை பெற்று எம்.பியாக அறிவிக்கப்பட்டவர் சுமந்திரன்.

அதனால், மக்களால் நிராகரிக்கப்பட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் குற்றச்சாட்டுக்களுக்கு பதில் கூறவேண்டிய கடப்பாடு தமக்கு இல்லை என சுமந்திரனோ அல்லது பிற தமிழரசுக் கட்சியினரோ எண்ணிவிடக் கூடாது.

கஜேந்திரகுமார் குற்றச்சாட்டாக இப்போது முன்வைக்கப்பட்டிருக்கின்ற விடயங்கள் மிகமிக முக்கியமானவை. தமிழர்களின் வாழ்வுரிமைகளை உறுதிப்படுத்தும் எதிர்காலம் தொடர்பான விவகாரம் இது. இந்த விடயத்தில் உரிய பதிலை கூட்டமைப்பின் தலைமை தர வேண்டும் - அதுதான் அரசியல் நேர்மைத் தன்மையாக - மேன்மைத் தன்மையாக - அமையும்.




## மக்கள் வங்கியின் சேவை விஸ்தரிப்பு

மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் 'சுயமாகவே சேவையாற்றக்கூடிய வங்கிச் சேவை அலகு' இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

## கோட்டாவிடம் நேற்றும் விசாரணை

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ நேற்று நிதிக்குற்றவியல் பொலிஸ் பிரிவுக்கு ஆஜராகி வாக்குமூலமளித்தார்.

அநுராதபுரத்தில் சந்த ஹிருசய விகாரைக் கட்டுமானத்தில் இடம்பெற்றமை என்று கூறப்படும் ஊழல்கள் தொடர்பான விசாரணைகளை ஒட்டியும் அது தொடர்பாக வாக்குமூலம் அளிக்கவுமே இந்தத் தடவை அவர் நிதிக் குற்றவியல் பொலிஸ் பிரிவுக்கு அழைக்கப்பட்டார். (உ)

# சட்டங்களை விட சுயகட்டுப்பாடு ஊடகங்களுக்கு மிக அவசியம்

## *ஊடகத்துறை அமைச்சர் கயந்தகருணா திலக்க தெரிவிப்பு*

கண்டி, பெப்.18

சட்டங்களை விதித்து ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதை விடவும், அவர்களே சுயகட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டு செயலாற்றுவது ஊடகங்களுக்கு மிக அவசியம் என இலங்கை ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணா திலக்க தெரிவித்துள்ளார்.

சுயாதீன ஊடக ஆணைக் குழுவொன்றை நியமிக்கும் அரசின் யோசனை தொடர்பாக ஊடக அமைப்புக்களினதும், ஊடக நிறுவனங்களின் பிரதானிகளினதும் கருத்துக்களைப் பெறவும் தீர்மானித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

கண்டி - பேராதனையில் உள்ள மரபணு ஆலை வளமையத்தில் பயிற்சி பெற்ற உறுப்பினர்களுக்கு சான்றிதழ் அளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணா திலகவும், ஊடகத்துறை பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவிதாரணவும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அமைச்சர் உரையாற்றியபோதே இவ்வாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றியவை வருமாறு:-

சுயாதீன ஊடக ஆணைக் குழு ஒன்றை அமைப்பதற்காக நாம் முயன்று வரும் பிரயத்தனம் குறித்து தற்போது பேசப்பட்டு வருகின்றது. கடந்த நவம்பர் மாதம் 22ஆம் திகதி இதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி, பிரதமர் உட்பட ஒட்டுமொத்த அமைச்சரவை அங்கத்தவர்களும் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். இவ்வாறான ஒரு பிரிவு பொதுசன ஊடகமொன்றுக்காக உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தார்கள். பத்திரிகை ஒன்றில் பிழையான செய்தி அல்லது நபர் ஒருவர் மீதான பிழையான கருத்தை வெளியிட்டால் முறைப்பாடு செய்ய பிரிவொன்று காணப்படுகிறது. ஆனால், இலத்திரனியல் ஊடகமொன்றில் அந்தப் பிழை நிகழ்ந்தால் அதற்கெதிராக முறையிட பிரிவு இல்லை.

அதனால் சுயாதீன ஊடக ஆணைக்குழு ஒன்றை அமைப்பது பற்றிய எமது கவனம் திரும்பியிருக்கிறது. இது குறித்து மக்களது கருத் துக்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. இப்போதும் பல்வேறு கருத்துக்கள் எமக்கு கிடைக் கப்பெற்றுள்ளன. இந்த விவகாரம் தொடர்பில் மகாநாயகர்களையும் சந்தித்து விளக்கமளித் துள்ளேன். ஏனைய மதத் தலைவர்களது யோசனைகளையும் நாம் பெற இருக்கின்றோம்.

விசேடமாக அடுத்த வாரத்திலிருந்து பொதுசன ஊடகங்களின் அமைப்புக்களிடம் இருந்தும் யோசனைகளைப் பெற எதிர்பார்க்கின்றோம் என்பதோடு ஊடக நிறுவனங்களின் பிரதானிகளின் கருத்துக்களையும் பெறவுள்ளோம். சட்டங்களை விதித்து அதன் பிரிவுகளுக்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதை விடவும் சுயகட்டுப்பாடுகளை ஒவ்வோர் ஊடகவியலாளனும் ஏற்படுத்திக் கொண்டால் நாட்டுக்கு நல்லதை செய்ய முடியும் என்பதே எனது கருத்தாகும் - என்றார். (எ)

# வடக்கு,கிழக்கை இணைப்பது குறித்து விக்னேஸ்வரன் மட்டுமே கோருகிறார்

## மேல் மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, பெப்.18

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்க வேண்டும் என்று வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மட்டுமே கோரி வருகின்றார் என்று மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேசியப் பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தல்களும் ஏற்படப்போவதில்லை என்று குறிப்பிட்டுள்ள அவர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எவ்வித பயங்கரவாத செயற்பாடுகளும் பதிவாக வில்லை என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

மத்திய அரசு மாகாண அரசுகளுக்குப் போதிளவு நிதிகளை வழங்க வேண்டியது அவசியமானது. மாகாண சபைகள் நேரடியாக சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்படுவது உசிதமாகாது.

முழு அளவிலான அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்குமாறு விக்னேஸ்வரன் மட்டுமே கோரி வருகின்றார். கிழக்கு மாகாணத்தில் அவ்வாறான கோரிக்கைகள் எழவில்லை. சமஷ்டி அல்லது கூடும்போக்குடைய எந்தவொரு தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.-என்றார். (எ)

## நாளை

19.02.2017
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம் : அனுசம் மு.இ 10.22 வரை
திதி : அட்டமி பி.ப 2.39 வரை

சுபநேரம் : 9.32 – 11.02 வரை
இராகுகாலம் : 5.02 – 6.32 வரை

# அவதூறுக் குற்றச்சாட்டு குறித்து நிதி அமைச்சர் வழக்குத் தொடர்வது மகிழ்ச்சியளிக்கிறது

## கம்மன்பில கூறுகிறார்



கொழும்பு, பெப்.18

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் தீர்மானம் மகிழ்ச்சி அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

லஞ்ச ஊழல் மோசடித் தவிர்ப்பு ஆணைக்குழுவில் நிதி அமைச்சருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிதி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உதய கம்மன்பிலவுக்கு நல்ல பாடம் புகட்ட உள்ளதாகவும், அவதூறு வழக்குத் தொடர உள்ளதாகவும் நிதி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் உதய கம்மன்பில ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமக்கு எதிராக நிதி அமைச்சர் அவதூறுக் குற்றச்சாட்டு அடிப்படையில் வழக்குத் தொடர்வது வரவேற்கப்பட வேண்டியது.

ஏனெனில் அவ்வாறு வழக்குத் தொடர்ந்தால் தம்மால் சாட்சியங்களைச் சமர்ப்பித்து குற்றச்சாட்டை நிரூபிக்க சந்தர்ப்பம் கிடைக்கும். எனவே நிதி அமைச்சர் வழக்குத் தொடர்வதையே விரும்புகின்றேன்.

எனக்கு எதிராக அவதூறு வழக்குத் தொடர ரவி கருணாநாயக்கவுக்கு எவ்வித நற்பெயரும் கிடையாது.

வழக்குத் தொடரப் பட்டால் சாட்சியங்களுடன் அவரது செயற்பாடுகளை நிரூபிப்பேன்.-என்றார். (எ)

# புனர்வாழ்வு பெற்ற போராளிகளின் வேலைத்திட்டத்துக்கு உதவி தேவை

## ஜப்பான் தூதரக ஆலோசகருடனான சந்திப்பில் வடக்கு அமைச்சர் டெனிஸ்வரன் வேண்டுகோள்

மன்னார், பெப்.18

புனர்வாழ்வு பெற்ற போராளிகளின் வேலைத் திட்டதை முன்னெடுத்துச் செல்ல நிதி உதவி வழங்குமாறு ஜப்பான் தூதரக ஆலோசருடனான சந்திப்பில் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா. டெனிஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜப்பானியத் தூதுவராலயத்தின் ஆலோசகர் மரிக்கோ யமாமோட்டோவுக்கும் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா. டெனிஸ்வரனுக்கும் இடையிலான விசேட சந்திப்பு ஒன்று கடந்த செவ்வாய்க் கிழமை மன்னாரிலுள்ள அமைச்சரின் உப அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் பலதரப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

கடந்த ஆண்டு ஐப்பானியத் தூதுவரோடு அமைச்சர் டெனிஸ்வரன் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் இணைந்து நடத்திய விஷேட சந்திப்பில் புனர்வாழ்வு பெற்ற போராளிகளது வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான நிதிக் கோரிக்கை தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில் இந்தச் சந்திப்பின்போது அந்த நிதிக்கோரிக்கை தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப் பட்டது. அத்துடன் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள்தொடர்பாகவும் இருவருக்குமிடையே பேச்சுக்கள் இடம்பெற்றன.

அத்துடன் கடந்த சில நாள்களாக புதுக்குடியிருப்பு மற்றும் கேப்பாபிலவு பிலக் குடியிருப்பு மக்கள் தமது காணிகளை தமக்கு வழங்குமாறு தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் ஒவ்வொரு வெளிநாட்டுத் தூதரங்களும் அந்த மக்களுக்கு ஆதரவு வழங்கி வருகின்றனர். இது தொடர்பாக மத்திய அர சுடன் தொடர்பு கொண்டு பாதிப்படைந்துள்ள மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் சந்திப்பில் அமைச்சரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து வடக்கு மாகாணத்தில் இன்னும் எவ்வளவோ அபிவிருத்திகளை நாம் செய்ய வேண்டிய கட்டாய தேவை இருக்கிறது. மத்திய அரசால் மாகாணத்துக்குக் கொடுக்கப்படும் குறித்தொதுக்கப்பட்ட நிதிகள் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு போதாமல் உள்ளன.

எனவே இவ்வாறான தூதரகங்களது உதவியுடனேயே பெரிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்று தெரிவித்ததோடு ஜப்பானியத் தூதரகம் மூலமும் எமது மாகாணத்தின் ஒருசில அபிவிருத்திகளைச் செய்வதற்கு நீங்கள் முன்வருவீர்கள் என்று எமது மாகாண மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-112)

## பன்றித்தலைச்சி உற்சவம்; பிரதேச செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம்

சாவகச்சேரி, பெப்.18

மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவ ஏற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்குச் சாவகச்சேரி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

சாவகச்சேரி பிரதேச சபையினர், சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர், சாவகச்சேரி பொலிஸார், தென்மராட்சி கல்வி வலயம், இ.போ.ச மற்றும் தனியார் பஸ்சேவை ஆகியவற்றின் பிரதிநிதிகள், மட்டுவில் பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சிப் பிரதேச செயலாளர் திருமதி தே.பாபு அறிவித்துள்ளார். (ச)

## நயினாதீவில் இன்று மருத்துவ முகாம்

நயினாதீவுப் பிரதேசத்தில் இலவச மருத்துவ முகாம் இன்று சனிக் கிழமை, காலை 9 மணி முதல் இடம் பெறவுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேச வைத்திய நிறுவகத்தின் ஏற்பாட்டில் இம் மருத்துவ முகாம் நயினாதீவுப் பிரதேச வைத்தியசாலையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது, என்று ஊர்காவற்றுறைப் பிரதேச வைத்திய அதிகாரி எஸ்.யதுநந்தன் தெரிவித்துள்ளார். (இ-18)

## திருமறைக் கலாமன்ற கலைஞர்களுக்கான ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், பெப்.18

திருமறைக் கலாமன்ற கலைஞர்களுக்கான ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை மாலை 5 மணியளவில் கலைத் தூது அழகியற் கலைக்கல்லூரி (கலைக் கோட் டம்) மண்டபத்தில் நடைபெறவுள்ளது. திருப்பாடுகளின் காட்சி ஆற்றுகை தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு இயக்குநர் அருட்பணி மரியசேவியர் தெரிவித்துள்ளார். (இ-8)

# கேப்பாபிலவு மண் மீட்பு போராட்டத்துக்கு கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள் ஆதரவு



மன்னார், பெப்.18

கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு மக்களின் தொடர் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சியிலும் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு மக்கள் விமானப்படையினரின் கட்டுப்பாட்டில் தங்களின் 524 ஏக்கர் சொந்த நிலத்தைத் தங்களிடம் கையளிக்கக் கோரி நேற்று வெள்ளிக்கிழமை 18 நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்களின் போராட்டத்துக்குப் பல தரப்புகளும் தங்களின் தார்மீக ஆதரவைத் தெரிவித்து வருகின்றன.

இந்தநிலையில் கிளிநொச்சிப் பொதுச்சந்தை வர்த்தகர்களும் கேப்பாபிலவு மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று கவனவீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 9 மணி முதல் கிளிநொச்சிப் பொதுச் சந்தை வர்த்தகர்கள் தங்களின் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-70)


மணமக்கள் விபரம்

☎ 0777164524
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| 7542 \| வே<br>1977 \| கொழும்பு \| 176 cm<br>Business \| இலங்கை<br>சதயம் (கும்பம்) \| செ: 4 | 4618 \| வே + வி<br>1989 \| கொழும்பு \| 172 cm<br>Banking Assistant \| இலங்கை<br>திருவோணம் (மகரம்) \| கி.பா: 113 |
| 7482 \| கோ<br>1980 \| சுண்ணாகம் \| 170 cm<br>Accounting Assistant \| இலங்கை<br>ரேவதி (மீனம்) \| கி.பா: 94 | 6753 \| ப<br>1991 \| சாவகச்சேரி \| 163 cm<br>A/L \| இலங்கை<br>விசாகம் (விருச்சிகம்) \| கி.பா: 94 \| செ: 12 |
| 7488 \| வே<br>1981 \| யாழ்நகர் \| 182 cm<br>Lawyer \| இலங்கை<br>கேட்டை (விருச்சிகம்) \| கி.பா: 8 | 6436 \| ந<br>1990 \| தாவடி \| 182 cm<br>Std- BA Arts \| இலங்கை<br>பரணி (மேடம்) \| கி.பா: 55 \| செ: 8 |
| 7334 \| வே<br>1973 \| கொக்குவில்<br>Advertising Manager \| இலங்கை<br>பூரம் (சிம்மம்) \| கி.பா: 13 | 3465 \| வே<br>1989 \| மூளாய் \| 162 cm<br>Software Engineer \| இலங்கை<br>உத்தரம் கன்னி) \| கி.பா: 32 \| சூரி செ: 10 |
| 5105 \| வே<br>1975 \| குரும்பசிட்டி \| 172 cm<br>Farmer \| இலங்கை<br>மகம் (சிம்மம்) \| கி.பா: 07 \| செ: 10 | 4988 \| வே<br>1988 \| கல்வியங்காடு \| 152 cm<br>A/L \| இலங்கை<br>பரணி (மேடம்) \| கி.பா: 32 |

அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com
480/2c, காலி வீதி, வெள்ளவத்தை 011 406 32 82
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 021 492 75 27

# மோ.சைக்கிள் விபத்தில் இளைஞன் உயிரிழப்பு!



மட்டக்களப்பு,பெப்.18

மட்டக்களப்பில் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப் பாட்டை இழந்து விபத்துக்குள் ளானதில், இளைஞன் ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை இரவு உயிரிழந்தார்.

பாலமீன்மடு பகுதியைச் சேர்ந்த சுரேஸ் சஜீந்த் (வயது -19) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள வீதி பிரிப்புத் தடுப்பில் மோதுண்டே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. பிரஸ்தாப இளைஞன் படுகாய மடைந்த நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# முஸ்லிம்களின் மனதை நெகிழ வைத்துள்ள முதலமைச்சர் விக்னேஸ்வரனின் பேச்சு

## இரு சமூகங்களும் இணைய வேண்டும் என்கிறார் சேகு இஸ்ஸதீன்

தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பேச்சளவிலாவது முஸ்லிம் மக்களுக்கும் ஒரு சமஷ்டி அலகு வழங்கப்பட வேண்டும் என்று கூறியிருப்பது முஸ்லிம்களின் மனதை நெகிழ வைத்த திருப்பமாகும். இரு சமூகங்களும் இணைந்து தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வுகளைப் பெற முயற்சிப்பதே சாலச் சிறந்ததாகும். தமிழ் மக்கள் பேரவை முஸ்லிம்களோடு இணைந்து பொருத்தமான, சமமான தீர்வுத் திட்டத்தை நோக்கிச் செயற்படுமாக இருந்தால், முஸ்லிம்கள் நெருக்கமான உறவை வளர்த்துக் கொள்வார்கள்.

-இவ்வாறு முஸ்லிம் தேசிய முன்னணியின் செயலாளர் நாயகம் எம்.எச்.சேகு இஸ்ஸதீன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் சமகால அரசியல் நிலை தொடர்பாக ஆராயும் கூட்டத்தில் கடந்த புதன்கிழமை கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பில் அண்மையில் நடைபெற்ற 'எழுக தமிழ்' பேரணி நிகழ்வின்போது வடமாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அங்கு குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை விளித்து, முஸ்லிம் மக்களுக்கும் சமஷ்டி அலகு வழங்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம் எனத் தெரிவித்திருந்தார். இதன் மூலம் முஸ்லிம்கள் மனதில் பட்டுப் போயிருந்த நம்பிக்கை மீது ஒருசொட்டு நீரைத் தெளித்து துளிர்க்கச் செய்துள்ளார்.

எனவே வடக்கு, கிழக்கு முஸ்லிம் தேசியத்தின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முன்மொழிவை ஒன்றிணைப்பதற்கு சமூகப்பற்றுள்ள தனிநபர்களும், கட்சிகளும் முஸ்லிம் கூட்டமைப்பை உருவாக்க வேண்டியது அவசியமாகும். இதற்குச் சாதகமாகச் சிந்திக்கும் விக்னேஸ்வரன் ஐயா போன்ற தமிழ்த் தலைவர்களோடு பேச்சுக்களில் ஈடுபடவேண்டும்.

கிழக்கிலுள்ள தமிழ்ப் பெரும்பான்மை பிரதேசங்களும் நிலத்தொடர்பற்றவையாகத்தான் இருக்கின்றன. அவற்றின் நிலத்தொடர்பற்ற தன்மையைக் கருத்துக்கு எடுத்துத்தான், வடமாகாணத்தோடு இணைத்து வடக்கு,கிழக்குத் தமிழர்களுக்கான சமஷ்டி அலகு உருவாக்கப்படும். அது போலத்தான் முஸ்லிம்களுக்குமான சமஷ்டி அலகும் உருவாக்கப்படும்.வடமாகாணத்து முஸ்லிம்களையும், கிழக்கு மாகாணத்து முஸ்லிம்களையும் அவர்கள் பெரும்பான்மையாக வாழும் நிலப்பரப்புகளை நிலத்தொடர்பற்ற வகையில் இணைப்பதன் மூலம் இரு மாகாணத்து முஸ்லிம்களுக்கும் ஒரு சமஷ்டி ஆட்சி அலகைப் பெற முடியுமானால் அது பற்றி அதிகம் யோசிக்க வேண்டியது அவசியமாகும்.- என்றார். (ச)

# தங்கச்சங்கிலி அறுப்பு

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜெயந்திபுரம் பாடசாலை வீதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு குடும்பப்பெண் ஒருவரின் தங்கச்சங்கிலி இனந்தெரியாத நபர்களால் அறுக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் மட்டக்களப்பு நகரிலிருந்து வீட் டுக்குச் சென்று கொண்டிருந்தபோது மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சங்கிலியை அறுத்துச் சென்றனர் என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச)

# வளர்ப்பு மகள் கொலை; தாய்க்கு மறியல் நீடிப்பு!

அம்பாறை,பெப்.18

அம்பாறை மத்திய முகாம் பிரதேசத்தில் வளர்ப்பு மகளை அடித்துக் கொலை செய்த சம்பவம் தொடர்பான சந்தேக நபரான தாயை எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.பேரின்பராஜா நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

2015 ஆம் ஆண்டு தனது வளர்ப்பு மகளான செ. ஜனனி (வயது -21) என்பவர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தார். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் தாயார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார். (ச)

# மரம் நடும் வேலைத்திட்டம்

மட்டக்களப்பு, ரிதிதென்னையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 'மட்டக்களப்பு கம்பஸ்' வளாகத்தில் இரண்டாயிரம் மரங்களைநடும் வேலைத் திட்டத்தை மட்டக்களப்பு கம்பஸ் தலைவரும் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கடந்த வாரம் ஆரம்பித்து வைத்தார்.

ரிதிதென்னையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மட்டக்களப்பு கம்பஸ் வளாகத்தில் சுத்தமான சுகாதாரமான இயற்கைக் காற்றைச் சுவாசிப்பதற்காக இரண்டாயிரம் மரங்கள்நடப்படவுள்ளன.

மரங்களைச் சேதமின்றிப் பிடுங்கி இன்னோர் இடத்தில்நடுவதற்குபயன்படுத்தப்படும் இயந்திரம் மூலம் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த இயந்திரம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளமை இதுவே முதற் சந்தர்ப்பம் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# தகவலறியும் சட்டமூலத்தை தெளிவுபடுத்த ஊடகங்கள் துணைபுரிய வேண்டும்

## மட்டக்களப்பு அரச அதிபர் தெரிவிப்பு

தகவலறியும் சட்டமூலத்தை சாதாரண மக்கள் விளங்கிக் கொள்வதற்கு ஊடகங்கள் துணைபுரிய வேண்டும். மாறாக நிவாரணத்தைக் கேட்கின்ற சட்டமல்ல என்பதை உணர்த்த வேண்டும்.

-இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரசஅதிபர் திருமதி பி..எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்களுக்கு கிடைக்க வேண்டியவைகள் கிடைக்காவிட்டால் - நியாயங்கள் மறுக்கப்பட்டிருந்தால் - அநீதி இழைக்கப்பட்டிருந்தால் - அவைகள் தொடர்பில் தட்டிக்கேட்கின்ற சட்டம் தான் தகவலறியும் சட்டமாகும். காணாமற்போன உறவினர்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் சிலர் கடந்த வாரம் என்னிடம் வந்து எமது உறவினர்கள் காணாமற்போனமை தொடர்பில் பதில் தரவேண்டும் மற்றும் எமக்கு வீடுகள் கிடைக்கவில்லை, தகவலறியும் சட்டத்தின் ஊடாக நீங்கள் பதில்தர வேண்டும் எனத் தெரிவித்தார்கள். காணாமல் போனவர்கள் தொடர்பில் நாங்கள் கையாள்வதில்லை என அவர்களுக்குத் தெளிவுபடுத்தினேன். அத்துடன், வீட்டுத் தேவைகள் குறித்து கிராம சேவகர், பிரதேச செயலர் போன்றோரிடம் விண்ணப்பித்துள்ளீர்களா என நான் அவர்களிடம் கேட்டபோது, 'இல்லை நாங்கள் யாரிடமும் விண்ணப்பிக்கவில்லை எமக்கு தகவலறியும் சட்டத்தின் கீழ் பதில் தர வேண்டும்' எனக் கேட்டார்கள்.

அரசாங்கத்தின் சட்டமூலங்கள், நிர்வாகச் சுற்றறிக்கைகள் போன்ற மக்களுக்கான ஏற்பாடுகளை மக்கள் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் மிக எளிய வடிவில் மக்களைச் சென்றடைவதற்கு ஊடகங்கள் துணை புரிய வேண்டும். -என்றார். (ச)

# காரைதீவில் பத்திரகாளி ஆலயக் கதவுகள் உடைப்பு!

மட்டக்களப்பு,பெப்.18

மட்டக்களப்பு காரைதீவு ஸ்ரீ பத்திரகாளி ஆலயத்தின் கதவுகள் இனந்தெரியாத நபர்களால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நள்ளிரவு உடைக்கப்பட்டுள்ளன என சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் ஆலயத்தின் மூலஸ்தானத்தின் முன்னாலுள்ள மூன்று பெரிய கதவுகளும் உடைக்கப்பட்டுள்ளன. அத்துடன், ஆலயத்துக்கு உள்ளேயிருந்த உண்டியல் வெளியே வீசப்பட்டிருகிறது. உடைக்கபட்ட உண்டியல் ஆலய பிரகாரத்திலே திறந்தவாறு கிடந்தது. அம்மனின் தங்க நகைகள் வைத்த இடத்திலேயே இருந்தன எனவும் ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஆலய பரிபாலன சபையினர் முறைப்பாடு செய்தமையை அடுத்து, பொலிஸார் ஆலயத்துக்குச் சென்று சம்பவ இடத்தைப் பார்வையிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணை சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)



# அம்பாந்தோட்டை ஆர்ப்பாட்டங்கள் முதலீட்டாளர்களை திசை திருப்பும்!

## இலங்கைக்கான சீனத் தூதுவர் யி ஷியான்லியாங் எச்சரிக்கை

கொழும்பு,பெப்.18

அம்பாந்தோட்டையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள், கைத்தொழில் முதலீட்டு வலயத்தில் முதலீடு செய்ய ஏற்கனவே இணங்கியிருந்த முதலீட்டாளர்களைத் திசை திருப்பி விடும் என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் யி ஷியான்லியாங் எச்சரித்துள்ளார்.

'ஒரு அணை ஒரு பாதை' திட்டம் என்ற தொனிப்பொருளில், பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன் தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் செயற்பாடுகளுக்கு கைத்தொழில் வலயம் முக்கியமானது.

அடுத்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் 3 தொடக்கம் 5 பில்லியன் டொலரை அம்பாந்தோட்டையில் முதலீடு செய்யுமாறு 10 மிகப் பெரும் நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளிடம், நான் வலியுறுத்தியிருந்தேன்.

அவர்களில் பெரும்பாலானவர்கள், 500 வரையான நிறுவனங்களை வைத்திருப் பவர்கள். ஆனால், ஆர்ப் பாட்டங்கள் தொடரும் என்றால், அவர்களை நான் எப்படி வற்புறுத்த முடியும், ?

அவர்கள் என்னை அணுகிய போது, என்னிடம் கேட்காதீர்கள், இலங்கைத் தலைவர்களிடம் பதிலைக் கேளுங்கள் என்று கூறினேன்.

எனினும்,இங்கு முதலீடு செய்யுமாறு நான் அவர்களை ஊக்குவித்தேன். இலங்கையில் உள்ளக அரசியலில் தலையீடு செய்வதற்கு சீனா ஆர்வம் காட்டாது.

அம்பாந்தோட்டையில் கலாசார நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோது, அவர்களின் நிலங்களை அவர்களின் அனுமதியின்றி பெற்றுக் கொள்ள மாட்டோம் என்று கூறியிருந்தேன்.

நான் அம்பாந்தோட்டை மாவட்டச்செயலருடன்பேசிய



போது, நாம் முதலீட்டுச் சபைக்கு ஒதுக்கப்பட்ட காணிகளையும், துறைமுகத்தின் முதற்கட்டத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டகாணிகளையுமே பயன்படுத்த விரும்புகிறோம் எனக் கூறினேன்.

துறைமுகம் இலங்கைக்குச் சொந்தமானது, இதுபற்றிய உடன்பாடு இன்னமும் கையெழுத்திடப்படவில்லை. வரைவு உடன்பாடு மாத்திரமே கையெழுத்திடப்பட்டுள்ளது.

எமக்கான பங்கைப் பெறும் போது, அரசாங்க நடைமுறைகளை முழுமையாக மதிப்போம். அரசியல்வாதிகள் அல்லது அரசியல் குழுக்கள், தற்போதைய, எதிர்காலத் தலைவர்களுக்கிடையிலான உள்நாட்டு அரசியல் வேறு பாடுகளில் தலையிடும் எண் ணம் எமக்குக் கிடையாது.

சிங்கப்பூர், ஜப்பான், அமெரிக்கா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகள், சிறப்பு வலயங்கள் மூலமே வேகமாக அபிவிருத்தி அடைந்தன.

உங்களின் நிலத்தையும், சுற்றுச்சூழலையும் பாதுகாக்க இதுதான் வழி என்றால், நீங்கள் எங்குமே கைத்தொழில்களைத் தொடங்க முடியாது.

கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் தாமதிக்கப்பட்ட போது, பொறுமையாக இருக்குமாறும், இலங்கை அரசு மற்றும் மக்களுடன் இயல்பாக பணியாற்றுமாறும் சீனா ஜனாதிபதி அறிவுரை கூறியிருந்தார். நான் பொறுமையுடன் இருந்தேன். ஆனால், வர்த்தக சமூகத்தின் பொறுமை குறித்து கரிசனை கொள்கிறேன்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பொதுவாக எந்த பிரச்சினையோ, வேறுபாடுகளோ இல்லை. சில அமைச்சர்களுடன் தான் எனக்கு கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆனால், இது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் அல்ல.

சீனா ஏற்கனவே இலங்கைக்கான முதல்தர நிதி உதவியாளராக இருக்கிறது. கடந்த ஆண்டில் கொடைகள் மற்றும் வர்த்தக, பிற கடன்கள் என்னும் வகையில், 10 பில்லியன் ரென்மின்பி இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

# இன்று கொழும்பு வரும் ஜெய்சங்கர் முக்கிய விவகாரங்கள் குறித்து பேச்சு

## தற்போதைய சூழ்நிலையில் முக்கியத்துவமிக்க விஜயம்

பரந்துபட்ட இருதரப்பு விவகாரங்கள் குறித்து இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு இந்திய வெளிவிவகாரச் செயலர் எஸ்.ஜெய்சங்கர், இன்று கொழும்புக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இன்றுசனிக்கிழமைகொழும்புக்கு விஜயம் மேற்கொள்ளும் அவர், எதிர்வரும் 20ஆம் திகதி வரை அங்கு தங்கியிருப்பார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கையுடன் நெருக்கமடைந்துள்ள உறவுகளை தொடரும் வகையில், இந்தப் விஜயம் அமையும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் விகாஸ் ஸ்வரூப் தெரிவித்துள்ளார்.

மின்சக்தி, நெடுஞ்சாலைகள், விமான நிலையம், ஹைட்ரோகாபன் உள்ளிட்ட பல்வேறு துறைகளில், ஒத்துழைப்பு மற்றும் கூட்டுக்கான வாய்ப்புகள் குறித்து இந்திய வெளிவிவகாரச் செயலர் இலங்கைத் தலைவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளார்.

இரண்டு நாடுகளின் தலைவர்களுக்கும் இடையில் நடத்தப்பட்ட பல்வேறு கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்து



வது குறித்து, இந்தப் பயணத்தின் போது கலந்துரையாடப்படும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இலங்கையுடன் இந்தியா மேற்கொள்ளப்படஉள்ள புதிய இருதரப்பு ஒப்பந்தங்கள் குறித்து கவனம் செலுத்துதல்மற்றும்திருகோணமலை, வடக்கில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் குறித்தும் இந்த விடயத்தின் போது கூடிய கவனம் செலுத்தப்படும்.

இதேவேளை, அம்பாந்தோட்டைத்துறைமுகம், துறைமுகநகர்த்திட்டம் மற்றும் சுதந்திர வர்த்தக வலயம் போன்ற பெரிய திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்து ஆராயும் நோக்கில் எதிர்வரும் மார்ச் மாதத்தில் சீனாவின் உயர்மட்டக் குழு இலங்கைக்கு வரவுள்ளது. இந்தநிலையில், அதற்கு முன்னராக இந்திய வெளியுறவுச் செயலரின் இலங்கை விஜயம் முக்கியத்துவம் பெறுகிறது.

# அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம் இரு நாடுகளுக்குமே முக்கியமானது!

## சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.18

அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம், இலங்கைக்கும் சீனாவுக்கும் முக்கியமானது என்று சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜெங் சுவாங் தெரிவித்துள்ளார்.

பீஜிங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நாளாந்த ஊடகவியலாளர் சந்திப்பில், எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசியல் மற்றும் சட்ட ரீதியான தடைகளை இலங்கை அகற்றும் வரையில், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் 1.1பில்லியன் டொலர் முதலீடு செய்யும் திட்டத்தை தாமதிக்க சீனா முடிவு செய்துள்ளது என்று வெளியான



செய்தி குறித்து சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரிடம்கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலளித்த சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜெங் சுவாங் தெரிவித்தவை வருமாறு:-

அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம்,இலங்கைக்கும் சீனாவுக்கும் முக்கியமான ஒன்று.

இது இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் உள்ளூர் மக்களின் வாழ்க்கைத் தரத்தைச் செழிப்படையச் செய்யும் நோக்கத்தைக் கொண்டது.

எமக்குத் தெரிந்தவரை, இந்தத் திட்டம் உறுதியாக முன்னெடுக்கப்படுகிறது.

சந்தை மற்றும் வர்த்தக கொள்கைகளுக்கு ஏற்ப, சமத்துவம் மற்றும் பரஸ்பர நலன்களின் அடிப்படையில் திட்டத்தை முன்னகர்த்துமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களை நாங்கள் ஊக்குவிக்கின்றோம். என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தான் இராணுவத் தளபதியுடன் இலங்கைக் கடற்படைத் தளபதி சந்திப்பு

*கொழும்பு,பெப்.18*

*பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் இராணுவத் தள பதி ஜெனரல் குவாமர்ஜாயட் பாஜ்வாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.*

*இந்தப் பேச்சுக்களின்போது, பிராந்திய பாதுகாப்பு, மற்றும் நிபுணத்துவ நலன்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன எனபாகிஸ்தான்வானொலி செய்தி வெளியிட்டுள்ளது.*



காலைக்கதிர்



# ரணிலின் வருகையை எதிர்த்து மெல்போர்னில் ஆர்ப்பாட்டங்கள்



தமிழர்களும் சிங்களவர்களும் தனித்தனியாக நடத்தினர்

மெல்போர்ன், பெப்.18

ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மெல்போர்ன் நகரில் நேற்றுமுன்தினம் தமிழர்களும், சிங்களவர்களும் தனித் தனியாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு கலாநிதிப் பட்டம் வழங்கிய டீக்கின் பல்கலைக் கழகத்தில் இலங்கைப் பிரதமர் நேற்றுமுன்தினம் உரையாற்றியிருந்தார்.


இதற்காக அவர் வருகை தந்திருந்தபோது, புலம் பெயர் தமிழர்களும், சிங்களவர்களும் வெவ்வேறு நோக்கங்களுக்காக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

'போர்க்குற்றவாளிகளைக் கௌரவிக்காதே' உள்ளிட்ட பல்வேறு சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகளுடன், புலம்பெயர் தமிழர்கள் தனியாக எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் புலிக்கொடியையும் ஏந்தியிருந்தனர்.

அதேவேளை, 'போர்வீரர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தாதே', 'சமஷ்டியை வழங்காதே', என்பது போன்ற சுலோகங்களுடன் கூடிய அட்டைகளுடன், புலம்பெயர் சிங்களவர்களும் இலங்கை பிரதமருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வெளியே ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, டீக்கின் பல்கலைக் கழகத்துக்குள் இலங்கைப் பிரதமர், இந்தியப் பெருங்கடலில், கப்பல்களின் பயணங்கள் தொடர்பாக உரையாற்றி விட்டு, இராப்போசன விருந்திலும் பங்கேற்றார். (எ)

# ராணுவ வைத்தியசாலைகளில் 'ஜெல் அட்டை'த் தொழில்நுட்பம்




இரத்த மாதிரிகளைப் பரிசோதிக்க

கொழும்பு, பெப்.18

இராணுவ வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள இரத்த வங்கியில் இரத்த மாதிரிகளைப் பரிசோதிக்கும் புதிய தொழில்நுட்பமான ஜெல் அட்டைத் தொழில் நுட்பம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் பயன்படுத்தப்படும் இவ்வகை உயரிய முதற்தர புதிய தொழில்நுட்பத்தை இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இலங்கை இராணுவ வைத்தியசாலையின் இரத்தவங்கிப் பிரிவு பயன் படுத்தத் தொடங்கி யுள்ளது.

புதிய ஜெல் அட்டைத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நோயாளர்கள் தொடர்பான துல்லியமானபெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் தேவையின் பொருட்டு அவற்றைப் பல வாரங்களுக்குக் களஞ்சியப்படுத்தி வைக்க முடிவதாகவும் இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் புதிய தொழில் நுட்பம், பரிசோதனைக்காக நோயாளர்களிடமிருந்து மிகக்குறைவான இரத்த மாதிரிகளின் மூலம் செயற்படுத்தக் கூடியதாகவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (எ)

## தினசரி ராசி பலன் 18.02.2017

துர்முகிவருஷம் 2017ஆம் ஆண்டு மாசித்திங்கள் 6ஆம் நாள் ஸப்தமி பகல் 11.48 வரை. பின் அட்டமி. விசாகம் இரவு 7.10 வரை. பின் அனுசம். சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: பகல் 9.27 முதல் 10.55 வரை. சுபநேரம்: மாலை 3.29 முதல் 4.59 வரை. இன்று திவசம் செய்ய வேண்டிய திதி: மாசிமாத தேய்பிறை அட்டமி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. ஆரோக்கியக் குறைவினால், மருத்துவச் செலவுகள் உண்டாகும். தொழிலாளர்களுக்குப் பொறுமை அவசியம் தேவை.

**ரிஷபம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. மனச்சந்தோஷத்துடன் கருமங்களை முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும். வியாபாரம் செழிப்படையும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். நீண்ட நாள் பிரிந்திருந்த உறவினர்கள் மீண்டும் ஒன்று சேருவார்கள். வர்த்தகர்களுக்கு வருமானம் வளமானதாக அமையும்.

**கடகம்:** கவலையான நாள். குடும்பப் பிரச்சினைகளால் மனதில் கவலை உண்டாகும். உத்தியோகத்தர்கள் தொழிலில் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

**சிம்மம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. எதிர்பார்த்த காரியம் தாமதமாகும். உத்தியோகத்தர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகள் தாமதமாகும்.

**கன்னி:** சுபீட்சமான நாள். நிதிநிலைமைகள் வளமாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு ஊதிய உயர்வு, உகந்த இடமாற்றம் என்பன கிடைக்கும்.

**துலாம்:** யோகமான பலன்கள் காணப்படுகின்றன. இதுவரை இழுபறியில் இருந்த பூர்வீகச் சொத்துக்கள் கைக்கு வந்து சேரும்.

**விருச்சிகம்:** சலனம் மிகுந்த நாள். மனதில் சஞ்சலம் தொடர்ந்திருக்கும். எதிலும் தெளிவான முடிவு எடுக்க முடியாமல் அல்லற் படுவார்கள்.

**தனுசு:** இன்பமான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். நினைத்த காரியங்கள் வெற்றி பெறும். தூர தேசத்திலிருந்து நல்ல தகவல் வரும்.

**மகரம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. சொத்துக்கள் விடயத்தில் அலைச்சல், செலவு, இழுபறி ஏற்படும்.

**கும்பம்:** யோசனையான நாள். தொழில் வருவாய், வசதிகள் புத்துயிர் பெறும். வியாபாரத்தில் துரித அபிவிருத்தி உண்டாகும்.

**மீனம்:** துயரமான நாள். எது ஒன்றும் நினைப்பது போலில்லாமல் மாறுவதால் கவலையும், கஷ்டமும் உருவாகும். மன விரக்தியும், வெறுப்பும் ஏற்படும்.

சந்திராட்டமநாள்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி, அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் கால்.

# ஒற்றைக் கண்ணுடன் பிறந்த விசித்திரமான ஆட்டுக்குட்டி



கொழும்பு, பெப்.18

கேகாலை - கருந்தப்பனப் பகுதியில் ஆட்டுக் குட்டி ஒன்று ஒற்றைக் கண்ணுடன் நேற்றுமுன்தினம்பிறந்துள்ளது. அந்தப்பகுதியில் உள்ள ஆடு ஒன்று இரண்டு ஆட்டுக் குட்டிகளை ஈன்றுள்ள போதிலும், அதில் ஓர் ஆட்டுக் குட்டியே இவ்வாறு ஒற்றைக்கண்ணுடன் பிறந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. அந்த ஆட்டுக் குட்டியைப் பார்ப்பதற்கு பிரதேசமக்கள் படையெடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப் படுகின்றது. (எ)

# சட்டவிரோதமாக நியூசிலாந்து செல்ல முயன்ற 8 பேர் கைது!

கொழும்பு, பெப்.18

சட்டவிரோதமாகப் படகு மூலம் நியூசிலாந்துக்குச் செல்ல முயன்ற 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தச் சந்தேகநபர்கள் எட்டுப்பேரும் நீர்கொழும்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 23 மற்றும் 42 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

# பெரும் கூட்டணியை அமைத்து அடுத்த உள்ளூராட்சித் தேர்தலில் குதிப்போம்

## ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கூறுகிறது

கொழும்பு, பெப்.18

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் பெரிய கூட்டணியை அமைத்து 2020 இல் அரசை அமைக்கும் நோக்குடனேயே களமிறங்குவோம்.

கொழும்பு டார்லி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நாட்டில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கு மக்களின் மனங்களின் அடிப்படையிலேயே தீர்வுகளை முன்வைத்து வருகிறார்.

மைத்திரிபால சிறிசேன ஒட்டுமொத்த நாட்டு மக்களின் வாக்குகளைப் பெற்றே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆனால், ஒரு மாவட்டத்தின் மக்களின் வாக்குகளால் வெற்றிபெற்றவர்கள் ஜனாதிபதியின் அதிகாரங்களையும் தாண்டிச் செயற்பட முற்படும் போதே பிரச்சினைகள் வலுப்பெற்று வருகின்றன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தொடர்ந்தும் உள்ளார் எனக் கூறுகின்றார்.

கட்சியை எவரும் பிளவுப்படுத்த நினைத்தால் அது கட்சிக்குச் செய்யும் துரோகம். 2020 ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சி அரசை நிறுவவேண்டும் என்றால் அனைவரும் ஒன்றிணைந்துச் செயற்பட வேண்டும்.

முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்களுக்கேகட்சியை பிளவுபடுத்த வேண்டிய தேவை உள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் பெரிய கூட்டணியை அமைத்துக் களமிறங்கவுள்ளோம்.

இதன்மூலம் ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியின் பலம் நிருபனமாகும். கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராகஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவே வரவேண்டும் என்பது பொதுக் குழுவின் தீர்மானமாகும்.

இதேவேளை, அடுத்த பொதுத் தேர்தலும் தற்போதைய ஜனாதிபதியின் தலைமையின் கீழேயே நடைபெறும்.

ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறு ஆண்டுகள் உள்ளன. 19 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலேயே ஜனாதிபதி ஒருவரின் பதவிக் காலம் ஐந்தாண்டுகள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆனால் 19 ஆவது திருத்தத்துக்கு முன்னர் பொது மக்களின் வாக்குகளால் மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்டமையால் 2021 ஆம் ஆண்டு வரை அவரின் பதவிகாலம் உள்ளது.-என்றார். (எ)

# மீண்டும் தலைகாட்டும் 'கோரமுகம்'



சிறிலங்காவின் அதிபராகப் பதவி வகித்தவரும் தற்போது தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தின் தலைவருமான சந்திரிகா குமாரதுங்கவுடனான அண்மைய நேர்காணல் தொடர்பாக சிறிலங்காவைச் சேர்ந்த அவதானிப்பாளர்கள் தற்போது உரையாடி வருகின்றனர்.

சந்திரிகா குமாரதுங்கவுடனான அண்மைய நேர்காணலின் ஒரு பகுதி மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பில் இந்த நாடு தற்போது எந்த நிலையில் உள்ளது என ஊடகவியலாளர் உபல் விக்கிரமசிங்க, குமாரதுங்கவிடம் வினவியிருந்தார்.

'இது மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகிறது' என குமாரதுங்க பதிலளித்திருந்தார். 'நல்லிணக்கத்தை மேற்கொள்வதற்கு எதிர்க்கட்சியினர் மற்றும் தீவிர தேசியவாதிகளிடமிருந்து பல்வேறு எதிர்ப்புக்கள் காண்பிக்கப்படுகின்ற போதிலும், பெரும்பான்மை மக்களின் ஆசீர்வாதங்களுடன் நல்லிணக்கச் செயற்பாடுகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றன.

நல்லிணக்கம் என்பது ஒரு நீண்ட செயற்பாடாகும். புதிய அரசியல் சீர்திருத்தத்தைக் கொண்டுவருவதே தற்போதைய தேவையாக உள்ளது. அதன் பின்பே காணாமற்போனோருக்கான அலுவலகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இவை நிறைவேற்றப்படும் போது, போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான நீதிமன்றங்கள் உருவாக்கப்பட வேண்டிய அவசியமில்லை' என சந்திரிகா குமாரதுங்க தனது நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

குமாரதுங்கவின் இந்த அறிக்கை பல்வேறு காரணங்களுக்காக ஆராயப்பட வேண்டும். இவற்றுள் சிலவற்றை இங்கு பார்க்கலாம்.

### நகைப்புக்குரியது

ஏனெனில், 1983 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதியில் சிறிலங்காவில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்துக்கான அடிப்படைப் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படாத நிலையில் நல்லிணக்கச் செயற்பாடுகள் ''வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றன'' என்கின்ற குமாரதுங்கவின் பதில் மிகவும் நகைப்புக்குரியதாகும்.

குறிப்பாக 'போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு நீதிமன்றங்களை அமைப்பதற்கு எவ்வித அவசியமுமில்லை' என்கின்ற குமாரதுங்கவின் கருத்து இங்கு நோக்கப்பட வேண்டும். குமாரதுங்க தனது நேர்காணலில் இவ்வாறு கூறியமை இவர் தற்போது வகிக்கும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தின் தலைவர் பதவிக்கு அவர் பொருத்தமுடையவரல்லர். ஆகவே,இவ்வாறான எதிர்மறையான மனப்போக்கைக் கொண்ட ஒருவர் இந்தப் பதவியை வகிப்பது பொருத்தமானதா?

யுத்த கால மீறல்கள் என்பது மிகவும் சிக்கலான மற்றும் எளிதில் தீர்க்க முடியாத ஒரு விவகாரமாகும். சிறிலங்காவின் பெரும்பான்மை இனமான சிங்களவர்களை மட்டும் கொண்ட சிறிலங்கா இராணுவத்தினர் இவ்வாறான மீறல்களில் ஈடுபட்டமையால் இது ஒரு சிக்கலான விவகாரமாகவே காணப்படுகிறது. மிகக் கொடிய உள்நாட்டு யுத்தத்தை வெற்றி கொண்டமைக்காக சிறிலங்கா இராணுவத்தினரை சிங்கள மக்கள் பாராட்டி வருகின்றனர். ஆகவே, இவ்வாறு தமக்கு வெற்றியை ஈட்டித் தந்த இராணுவ வீரர்கள் யுத்தக் குற்ற விசாரணைகளுக்காக நிறுத்தப்படுகின்றமையை இந்த மக்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள்.

மறுபுறத்தே, நாட்டில் நிலையான அமைதியை எட்டுவதற்கு, ஒரு நம்பகமான பொறுப்புக் கூறல் செயற்பாடு மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆனால், இவ்வாறான நம்பகமான விசாரணை இடம்பெறுவதற்கான எவ்வித சாதகமான சூழ்நிலையும் காணப்படவில்லை.

### செயற்படாத ஆணைக்குழுக்கள்!

மேலும், நாட்டின் அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பாகவும் குமாரதுங்க கருத்து தெரிவித்திருந்தார். இடைக்கால நீதிப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவது தொடர்பில் எவ்வித சமரசங்களும் எட்டப்படவில்லை. தவிர, சிறிலங்காவில் பரிந்துரைக்கப்பட்ட இடைக்காலநீதிப் பொறிமுறைகளான 'உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு, நீதிச் சேவை ஆணைக்குழு, பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீட்டை வழங்குவதற்கான ஆணைக்குழு மற்றும் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு ஆகிய நான்கு ஆணைக்குழுக்களில் எவையுமே முறையாகச் செயற்படவில்லை.

காணாமற்போனவர்களுக்கான அலுவலகம் ஒன்றை உருவாக்குவதற்கு நாடாளுமன்றில் அனுமதிவழங்கப்பட்டபோதிலும் இன்னமும் இது செயற்படுத்தப்படவில்லை. அத்துடன், பொறுப்புக்கூறல் பொறிமுறையை உருவாக்குவதற்கான எவ்வித கால அவகாசமும் தெளிவாக வரையறுக்கப்படவில்லை.

இந்நிலையில், போர்க் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறுவதற்கான நீதிச் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்க முடியாது. அத்துடன், பரந்த இடைக்கால நீதிச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதில் இந்த அரசாங்கம் எவ்வளவு தூரம் தீவிரமாகச் செயற்படுகின்றது என்பதையும் மீளவும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

குமாரதுங்க அண்மையில் வழங்கிய நேர்காணலில் தெரிவித்த கருத்துக்களிலிருந்து அவரது தனிப்பட்ட ஆளுமையை அளவிட்டுக் கொள்ள முடியும். நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான குமாரதுங்கவின் எண்ணங்கள் அதிபர் மைத்திரிபால சிறிசேனவின் அல்லது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணங்களில் இருந்து எவ்வித வேறுபாட்டையும் கொண்டிருக்கவில்லை என்பது ஒரு கெட்டவாய்ப்பாகும்.

மொழியாக்கம் – நித்தியபாரதி

---

# இந்தியா 'ஓரம்போ'; சீனா மிரட்டல்

தென் சீனக் கடல் தனக்குச் சொந்தமானது என்றும்,அமெரிக்கா அங்குள்ள தீவுகளைவிட்டு விலகியிருக்க வேண்டும் என்றும் அறிவித்துள்ள சீனா, தற்போது, இந்தியாவை அதன் கொலனியான சிறிலங்காவை விட்டு விலகியிருக்குமாறு கூறுவதன் மூலம், இந்திய மாக்கடலில் தனது செல்வாக்கை சீனா நிலைநிறுத்தி வருகிறது.

ஆசியாவின் இரு பெரும் நாடுகளான இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இந்த முரண்பாட்டைத் தென்கிழக்காசிய சந்தைகளின்முதலீட்டாளர்கள் தமது கவனத்தில் கொள்ள வேண்டிய நிலை காணப்படுகிறது. ஏனெனில்,இவ்விரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசல் பூகோள அரசியல் ஆபத்தை உண்டு பண்ணும் என்பதால் இது தொடர்பில் முதலீட்டாளர்கள் அதிகம் கவனம் செலுத்துகின்றனர்.

சிறிலங்காவின் முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ தமிழ்ப் புலிகளை எதிர்த்துப் போரிடுவதற்காக 2007இல் இராணுவ மற்றும் இராஜதந்திர சார் உதவிகளை வழங்கியதில் இருந்து சிறிலங்கா மீதான சீனாவின் கொலனித்துவம் ஆரம்பமாகியது.

இதனைத் தொடர்ந்து சிறிலங்காவில் பல்வேறு பெரும் கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்வதற்கு உயர் வட்டி வீதத்துடன் கூடிய கடன்கள் சீனாவால் சிறிலங்காவுக்கு வழங்கப்பட்டன. இக்கடனை சிறிலங்காவால் திருப்பிச் செலுத்த முடியாததால் தனது துறைமுகம் ஒன்றை சீனாவுக்கு குத்தகைக்கு வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்துறைமுகம் இந்திய மாக்கடலில் சீனா தனது செல்வாக்கை நிலைநிறுத்துவதற்கான ஒரு முக்கிய மையமாக உள்ளது.



இந்தியாவைச் சீனா சுற்றிவளைக்கின்றது என்பது இந்தியாவுக்கு ஒரு கெட்ட செய்தியாகும். 'இந்தியாவுக்கு அருகிலுள்ள கேந்திர முக்கியத்துவம் மிக்க துறைமுகங்களில் சீனா கால் பதிப்பதானது இந்தியாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது' என் அமெரிக்காவின் வெளிவிவகார இராஜதந்திரியான ஜெப் எம் ஸ்மித் எழுதியுள்ளார்.

சிறிலங்காவின் கேந்திர முக்கியத்துவம் மிக்க துறைமுகத்தைத் தனது இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்கான எவ்வித திட்டமுமில்லை என சீனா மீண்டும் மீண்டும் உறுதியளித்துள்ளது.

ஆனால், கடந்த கால நிகழ்வுகள் இதனை உறுதி செய்கின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில், சீன நீர்மூழ்கிக் கப்பல்கள்சிலதடவைகள் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்றுள்ளன. இதனை இந்தியா பலமாக எதிர்த்தது.

இந்தியாவைப் பொறுத்தளவில், சிறிலங்காவில் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் திடீரெனத் தரித்து நின்ற சம்பவம் தாங்கிக் கொள்ள முடியாததாகக் காணப்படுகிறது.

கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பல்களில் 70 சதவீதம் இந்தியாவுக்குச் சொந்தமானவையாகும். இந்நிலையில் சீனா,சிறிலங்காவில் தனது இருப்பை விரிவுபடுத்துவதற்காக மேற்கொள்ளும் முயற்சிகள் தொடர்பாக புதுடில்லி மிகவும் அதிருப்தியுற்றுள்ளது என ஸ்மித் தெரிவித்துள்ளார்.

கொழும்புத்துறைமுகத்தில் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்கள் தரித்து நின்று ஒரு சில வாரங்களின் பின்னர் ராஜபக்ஷவை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்தார். அதன்போது, கடல் சார் உடன்படிக்கையின் கீழ் இவ்வாறு வேற்று நாட்டுக் கப்பல்கள்தரித்துநிற்கின்றமை தொடர்பாக சிறிலங்கா தனது அயல்நாடுகளுக்குத் தெரியப்படுத்த வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது என அவர் நினைவுபடுத்தினார்.

ஆனால், அதே நீர்மூழ்கிக் கப்பல் மீண்டும் நவம்பர் 2014இல் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்ற போது இந்தியா மேலும் அதிர்ச்சியுற்றது.

தனது கொலனித்துவமான சிறிலங்கா தொடர்பில் தான் எத்தகைய திட்டத்தைக் கொண்டுள்ளேன் என சீனா வெளிப்படையாகத் தெரிவித்துள்ளது. அதாவது சீனா,சிறிலங்காவில் இருவேறுபட்ட விடயங்களை மேற்கொள்ள வுள்ளது.

ஆகவே இந்தியா, சீனாவைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் அல்லது சீனாவின் திட்டத்துக்கு ஏற்ப இந்தியா தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.


வழிமூலம் - Forbes
மொழியாக்கம் - நித்தியபாரதி




# ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...? 94

பொன்.வேணு கிருஷ்ணா


ஈரான் அதன் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் அணு ஆயுதங்களைத் தாங்கிச்செல்ல முடியும் என்பதை திரும்ப திரும்ப மறுத்துள்ளது. தீர்மானம் 2231 இனை கண் காணிப்பதற்கு பொறுப்பாளியான சர்வதேச அணுசக்தி அமைப்பு இதை உறுதி செய்துள்ளது. ஏவுகணைச் சோதனைகள் ஈரானின் சுயபாதுகாப்புக்கான ''ஒரு முழுமையான உள்ளடக்கமாகும்'' என்று ஈரானிய வெளியுறவு அமைச்சரகத்தின் அறிக்கை அறிவித்தது, மேலும் இவை ''ஈரான் ஏவுகணைத் திட்டம் பற்றிய அரசியல் ரீதியான நோக்கம்கொண்ட கருத்துக்களையும்'' மறுத்தும் உள்ளது.




ஏவுகணைச் சோதனை குறித்தோ அல்லது சவூதிக் கப்பல் தாக்குதல் மீதான குற்றச்சாட்டு குறித்த ஃபிளினின் கூற்றுக்களுக்கு பின்புல ஆதாரம் எதையும் அவர் வழங்கவில்லை.

என்றும், மேலும் செங்கடல் ஊடாக செல்லும் அமெரிக்க மற்றும் அதன் நட்பு நாடுகளின் கப்பல்களை அச்சுறுத்தியுள்ளனர் என்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அறிவித்தார். இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்க நட்பு மற்றும் கூட்டு நாடுகளை அச்சுறுத்துவதற்கு ஈரான் இதுபோன்ற நடவடிக்கைகளைத் தொடருகிறது. என்றார்.

## 10, ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்




ட்ரம்ப் நிர்வாகத்தில் ஃபிளினோ அல்லது வேறு எவருமோ ஹௌத்திகிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் பயிற்சியளித்து ஆயுத உதவி செய்கிற தென்பதை நிரூபிக்க வில்லை. எது தெளிவாக உள்ளது என்றால், யேமனில் ஹௌத்தி தலைமையிலான அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக சவூதி அரேபியா, அமெரிக்கா மற்றும் பல வேறு வளைகுடா நாடுகளுடன் சேர்ந்து ஒரு இரத்தக்களரியான போர் தொடுத்துவருவதுடன், 10,000 க்கும் மேற்பட்ட மக்கள் இதனால் கொல்லப்பட்டுள்ளனர். அமெரிக்க ஆயுதப் படைகளின் ஆதரவு கொண்ட சவூதி போர் விமானங்களால், மருத்துவமனைகள் மற்றும் இராணுவமல்லாத பிற மையங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

Resolution 2231 (2015)
Background
Diplomatic efforts to reach a comprehensive, long-term and proper solution to the Iranian nuclear issue culminated in the Joint Comprehensive Plan of Action (JCPOA) concluded on 14 July 2015 by China, France, Germany, the Russian Federation, the United Kingdom, the United States, the High Representative of the European Union (the E3/EU+3) and the Islamic Republic of Iran. On 20 July 2015, the Security Council unanimously adopted resolution 2231 (2015) endorsing the JCPOA. The Security Council affirmed that conclusion of the JCPOA marked a fundamental shift in its consideration of the Iranian nuclear issue, expressed its desire to build a new relationship with Iran strengthened by the implementation of the JCPOA and to bring to a satisfactory conclusion its consideration of this matter.. .....

## ஈரானால் பயிற்சியளிக்கப்பட்டு ஆயுத உதவி பெற்ற ஹௌத்தி

ஈரானால் பயிற்சியளிக்கப்பட்டு ஆயுதஉதவி பெற்ற ஹௌத்தி படையினர் கடந்த ஆறு மாதங்களாக எமிரேட் மற்றும் சவூதி கப்பல்கள் மீதான தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றது போன்றதான ஒரு தொடர்ச் சம்பவங்களில் ஒன்றாகவே சவூதி அட்பற்படைக் கப்பல் தாக்கப்பட்டது





## அமெரிக்க தூதர் நிக்கி ஹேலியின் ஆத்திரமூட்டும் கருத்து

வொஷிங்டனின் கோரிக்கையின்படி ஈரானின் ஏவுகணைச் சோதனை குறித்து நடத்தப்பட்ட ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஓர் அவசர கூட்டத்திற்குப் பின்னர், ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்க தூதர் நிக்கி ஹேலி இன் ஆத்திரமூட்டும் கருத்துக்களையே ஃபிளினின் குறிப்புக்கள் பின்பற்றுகின்றன. ஹேலி, இந்த ஏவுகணைச் சோதனை ''முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது'' என்று முத்திரை குத்துவதுடன், ''நாங்கள் செயல்பட போகிறோம். நாங்கள் வலுவாக இருக்கப் போகிறோம். நாங்கள் மிகுந்த பலமாக இருக்கப்போகிறோம் மேலும், அமெரிக்க




மக்கள் மற்றும் உலகம் முழுவதிலும் உள்ள மக்களையும் பாதுகாக்க என்ன தேவைப்பட்டாலும் அதனை நாங்கள் செயல்படுத்த இருக்கிறோம்.'' என்றும் அறிவித்தார்.

ஈரான் உட்பட முஸ்லிம் பெரும்பான்மையாக வாழும் ஏழு நாடுகள் மீது ட்ரம்ப் நிர்வாகம் விதித்துள்ள குடிவரவுத் தடை குறித்து ஏற்கனவே தெஹ்ரான் வொஷிங்டன் உடன் மோதலில் உள்ளது. தெஹ்ரான், ஈரானுக்கு பயணிக்கின்ற அமெரிக்க குடிமக்களுக்கு தடைகளை விதித்து இதற்குப் பதிலடி கொடுத்தது.





## ஐ.நா. தீர்மானம் 2231

2015ல் ஒபாமா நிர்வாகத்தின் மூலமாக பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுடன் இணைந்து ஈரானுடன் உருவாக்கப்பட்ட அணுசக்தி ஒப்பந்தம் தான் ட்ரம்ப் நிர்வாகத்தின் உடனடி இலக்காக உள்ளது. இந்த ஒப்பந்தம், ஐ.நா. தீர்மானம் 2231 இல் நெறிப்படுத்தப்பட்டு, ஈரான் மீதான முடக்கும் பொருளாதாரத் தடைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கு பதிலாக ஈரான் தனது அணுசக்தித் திட்டங்களை மூடிவிடவேண்டும் என்றும் ஊடுருவும் பரிசோதனைகளுக்கு இடமளிக்க வேண்டும் என்பதில் அது முடிவடைந்தது.

''தெஹ்ரானின் கெடுதல் விளைவிக்கும் நடவடிக்கைகளை போதுமான அளவு எதிர்கொள்ள'' ஒபாமா நிர்வாகம் தவறிவிட்டதற்கு ஃபிளினின் கண்டனம் தெரிவித்தார். மேலும் அவர், ''ஈரான் மற்றும் ஒபாமா நிர்வாகம், அத்துடன் ஐ.நா.வுக்கும் இடையே அமைப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்கள் பலவீனமானதாகவும், பயனற்றதாகவும் உள்ளன என்று ஜனாதிபதி ட்ரம்ப் கடுமையாக விமர்சித்துள்ளார்.'' என்றும் கூறினார்.

(கேள்வி தொடரும்...)





# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



61

## ராஜீவ் காந்திக்கு பிரபா எழுதிய கடிதங்கள்

1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வடக்கு, கிழக்கு மாகாணசபைகளுக்கான தேர்தல் நடைபெற்றது. இந்தியப் படைகளால் ஒழுங்கு செய்யப்பட்டு, அவர்களது 'கண்காணிப்புடன்' ஏமாற்று மோசடியாக நடைபெற்ற இந்தத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவினர் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக்கொண்டனர். இந்தக் குழுவின் தலைவர்களில் ஒருவரான வரதராஜப்பெருமாள் முதலமைச்சராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாண சபை நிர்வாகச் செயலகத்தைத் திருகோணமலையில் நிறுவிச் செயற்படுவதற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைமை விரும்பியது. திருகோணமலையைத் தலைநகராகக் கொண்டு தமிழரின் மாகாண நிர்வாகம் செயற்படுவதை ஜெயவர்த்தனாவும் அவரது இனவாத அமைச்சர்களும் அறவே விரும்பவில்லை இப்படியான முரண்பாடு காரணமாக, வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாகம் செயற்பட முடியாத சிக்கல்களுக்குள் சிக்கியது. ஜெயவர்த்தனா தனது வழமையான அரசியல் ஏமாற்று வித்தையைக் காண்பிக்க ஆரம்பித்தார். திருகோணமலை நகரில் மாகாண நிர்வாகத்துக்கான செயலகக் கட்டடம் எதனையும் வழங்க மறுத்த அரசு, குறைந்தபட்ச நிர்வாக அதிகாரங்களைக் கொடுப்பதிலும் இழுத்தடிப்புச் செய்தது. அரசியல் அதிகாரமின்றி, நிதியின்றி, நிர்வாக செயலக வசதிகளின்றி ஒரு சூன்யத்துக்குள் தள்ளப்பட்ட வரதராஜப்பெருமாள், கொழும்புக்கும் திருகோணமலைக்கும் மாறி மாறிக் காவடி எடுத்தும் பயனெதுவும் கிடைக்கவில்லை. தமிழ் மாநிலத்துக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்ய ஜெயவர்த்தனா தயாராக இல்லை. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியோ, இந்தியத் தூதுவர் டிக்சிட்டோ அல்லது இந்திய அமைதிப் படைத் தளபதிகளோ எவராலும் ஜெயவர்த்தனாவின் விட்டுக் கொடா கடும்போக்கை நெகிழ்த்த முடியவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாகம் செயலிழந்து செத்துப்போனது. இதன் விளைவாக மிக நீண்டதும் சிக்கலானதுமான இந்தியாவின் மத்தியஸ்துவ இராஜதந்திர முயற்சிப் பாதை தெரியாது தடுமாறி முட்டுச்சந்துக்குள் முடங்கியது. இந்திய அரசின் அடிவருடியாகச் செயற்பட்ட ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைப் முன்னணி அரசியல் பாலைவனத்தில் அந்நியப்பட்டது. ஜெயவர்த்தனாவின் சூழ்ச்சிகர அரசியல் தந்திரத்தால் ராஜீவ் காந்தி ஏமாற்றப்பட்டார். இந்தியப் பிரதமரைத் தவறான பாதையில் வழி நடத்திச் சென்று ஏமாற்றியமை மட்டுமன்றி, தமிழரின் சுதந்திர இயக்கத்துக்கு எதிராக இந்தியஇராணுவத்தை மோத விட்டுத் தமிழரின் உரிமைப் போராட்டத்தை பெரும் பின்னடைவுக்குள் தள்ளிவிட்டார் ஜெயவர்த்தனா. இப்படியாக இந்தியாவையும் ஈழத் தமிழரையும் ஏமாற்றி, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாது இழுத்தடித்து, தமிழர் தாயகத்தில் ஒரு கொடிய யுத்தச் சூழ்நிலையையும் சிங்கள தேசத்தில் இளைஞரின் புரட்சிகரக் கிளர்ச்சியையும் தோற்றுவித்து, இலங்கைத் தீவை ஒரு பெரும் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டு, 1988 ஆம் ஆண்டு இறுதியில், அரச அதிபர் ஜெயவர்த்தனா அரசியலிலிருந்து ஓய்வு பெற்றார்.

1988 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் புதிய ஜனாதிபதியாக ரணசிங்க பிரேமதாசா ஆட்சிப்பீடம் ஏறினார். இந்திய - இலங்கை உறவில் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தும் புதிய வெளியுறவுக் கொள்கையை முன்னெடுக்க பிரேமதாசவின் ஆட்சிப்பீடம் முடிவெடுத்தது. தென்னிலங்கையில் ஜே.வி.பி அமைப்பின் ஆயுதக் கிளர்ச்சியையும் வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகள் முன்னெடுத்த கெரில்லாப் போரையும் எதிர்கொண்ட பிரேமதாசவின் ஆட்சிப்பீடம் ஒரு புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்க விரும்பியது. அதாவது, புதிய இளம் பரம்பரையின் அபிலாஷைகளைப் பிரதிபலித்து நின்ற தமிழ், சிங்களப் புரட்சிகர இயக்கங்களின் தலைமைகளுடன் சமரசப் பேச்சுகளை நடத்தி இணக்கப்பாடு காண முயற்சித்தது. புதிய அரச அதிபரின் சமரச அணுகுமுறையை நாம் சாதகமாகப் பரிசீலனை செய்தோம்.

ஜனாதிபதி பிரேமதாச ஒரு வித்தியாசமான மனிதர். அடிப்படையில், அவர் ஒரு சிங்களத் தேசியவாதி. இலங்கை மீது அந்நிய ஆதிக்கத்தை வெறுப்பவர். குறிப்பாக, இந்திய வல்லாதிக்கத் தலையீட்டை அவர் அறவே விரும்பவில்லை. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இலங்கையின் இறையாண்மைக்கு அது தீங்கு விளைவிப்பதாகவே பிரேமதாச கருதினார். அமைதிகாக்கும் படைகள் என்ற போர்வையில் இந்திய இராணுவம் இலங்கையின் ஒரு பகுதியை ஆக்கிரமித்து நிற்கிறது என்பதே அவரது நிலைப்பாடு. இந்திய இராணுவத் தலையீட்டின் எதிர் விளைவாகவே வடக்கு, கிழக்கிலும், தென்னிலங்கையிலும் வன்முறை தாண்டவமாடுகிறது எனக் கருதிய அவர், இந்தியப் படைகளை இலங்கையிலிருந்து வெளியேற்ற விரும்பினார். இந்த விடயம் தொடர்பாகவே அவர் ஜே.வி.பி. கிளர்ச்சிக்காரருடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சுகளை நடத்த விரும்பினார்.

இந்திய இராணுவத்தைத் தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்பதில் எமது விடுதலை அமைப்புக்கும் பிரேமதாச ஆட்சிப்பீடத்துக்கும் கொள்கையளவில் ஒருமைப்பாடு நிலவியதால் பிரேமதாச அரசுடன் பேச்சுகளை நடத்துவதற்கு நாம் இணங்கினோம். எமது விடுதலை அமைப்பின் இந்த முடிவு இந்திய அயலுறவு இராஜதந்திரத்துக்கு விழுந்த பலத்த அடியாகும்.



விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாக ஓரங்கட்டி, ஒதுக்கி, இராணுவ ரீதியாக அவர்களைத் துவம்சம் செய்து, தனது அடிவருடிகளை அதிகாரத்தில் அமர்த்தும் இந்தியாவின் கொள்கை படுதோல்வியைச் சந்தித்தது. கொழும்பு நகரில் பேச்சுகள் ஆரம்பித்தபொழுது, தமிழீழ மக்களின் அரசியல் நலன்களையும் அபிலாஷைகளையும் பிரதிநிதிப்படுத்தும் பலம்பொருந்திய தேசிய இயக்கமாக விடுதலைப் புலிகள் இயக்கம் தலைதூக்கியது. விடுதலைப் புலிகளை அரசியல் விவகாரத்திலிருந்து ஒதுக்கி, தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்துவது என்ற இந்தியாவின் கொள்கை படுதோல்வி அடைந்தது என்பதை டிக்சிட், 'கொழும்பில் எனது பணி' என்ற நூலில் ஒப்புக்கொள்கிறார். இந்த விடயம் பற்றி அவர் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.

*''பேச்சுகள் வாயிலாகப் பெறக்கூடிய ஒரு தீர்வுத் திட்டத்தில் விடுதலைப் புலிகள் பங்குகொள்ளப் போவதில்லை என நான் நம்பினேன். அதனால் விடுதலைப் புலிகளை ஒதுக்கி, ஓரம்கட்டிவிட்டு ஏனைய குழுக்களுடன் இந்தியா உறவை வைத்துக்கொள்ள வேண்டும் என நான் கருதினேன். இந்தியாவின் அரசியல் முயற்சிகளில் மற்றைய குழுக்கள் பங்குகொள்ளும் அதே வேளை, விடுதலைப் புலிகள் ஆரம்பக் கட்டத்தில் வெற்றிகரமாக ஒதுக்கப்படுவார்களாயின் அவர்கள் சமாதான வழிமுறையில் பங்குகொள்ள நிர்ப்பந்திக்கப்படுவார்கள். எனது இந்த மதிப்பீடு தவறானதாகும். இலங்கைத் தமிழர்களிடமிருந்து விடுதலைப் புலிகளை வெற்றிகரமாக ஓரம்கட்டிவிடலாம் என்ற எனது எதிர்பார்ப்பும் தவறாக முடிந்தது. ஏனென்றால் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுதிதளராத, நீடித்து நின்று போராடும் திறனாற்றலுக்குப் பக்கபலமாக இலங்கை - இந்திய அரசியலில் எத்தகைய சக்திகளின் நீரோட்டங்களும் உள்நோக்கங்களும் செயற்பட்டிருக்கக் கூடும் என்பதை என்னால் எடைபோட முடியவில்லை.''*

இலங்கையில் இந்தியாவின் தலையீடு தோல்வி கண்டதன் பிரதான காரணம் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியும் அவரது ஆலோசகர்களும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் நம்பிக்கைத் துரோகம் இழைக்கும் நயவஞ்சகக் குணவியல்பைச் சரியாக எடைபோடத் தவறியமைதான். தமிழீழ மக்களின் கோரிக்கைகளுக்கு ஒரு நியாயமான தீர்வு வழங்கி, இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் நேர்மையோ அன்றி அரசியல் உறுதிப்பாடோ அவரிடம் இருக்கவில்லை. சாராம்சத்தில் ஜெயவர்த்தனா ஒரு கடும்போக்கான சிங்களத் தேசியவாதியாவார். ஆழமான சிங்கள மேலாண்மை வாதப் போக்குடையவர். பெரும்பான்மைச் சிங்களவரின் நலன்களைப் பேணுவதில் மிகவும் நாட்டம் கொண்டவர். தனது நீண்ட அரசியல் வரலாற்றில் தமிழ் மக்களுக்கு நீதி வழங்க மறுத்து, அவர்களது அரசியல் சுதந்திரங்களைப் பறித்து, அவர்களது உரிமைப் போராட்டங்களை நசுக்கி, சிங்கள மேலாண்மை வாதத்தின் பிதாமகராக விளங்கினார் ஜெயவர்த்தனா. இந்திரா காந்தி அம்மையாரை இவரால் ஏமாற்ற முடியவில்லை. இவரது பௌத்த சீல முகமூடிக்குப் பின்னால் ஒளிந்திருந்த இனவாத முகத்தை இந்திராகாந்தி எப்பொழுதோ இனங்கண்டு கொண்டார். அரசியல் முதிர்ச்சியற்ற இளைஞரான ராஜீவ் காந்தி, இவரது சாணக்கியப் பொறிக்குள் சறுக்கி விழுந்தார். ராஜீவ்காந்தியின் நிர்வாகப் பீடத்துடன் ஒரு வித்தியாசமான இராஜதந்திர அணுகுமுறையைக் கையாண்டார் ஜெயவர்த்தனா. ராஜீவ் அரசுடன் தனது சுயரூபத்தை வெளிக்காட்டி, முரண்பட்டு மோதுவதை அவர் தவிர்த்துக் கொண்டார். தமிழரின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதிலும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைச் செயற்படுத்துவதிலும் தனக்கு உண்மையான - நேர்மையான - அக்கறையும் உறுதிப்பாடும் உண்டு என நயவஞ்சகமாக நடித்து இந்தியத் தலைவர்களை நம்ப வைத்தார் ஜெயவர்த்தனா. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்கம் செய்வதிலும் மற்றும் முக்கிய விவகாரங்களிலும் ஜெயவர்த்தனாவுடன் நெருங்கிப் பழகி உறவாடிய டிக்சிட், அவரைப் பற்றிக் குறிப்பிடுகையில், *''இந்திய அரசாங்கத்தின் உதவியோடு தமிழருடன் ஒரு நியாயமான இணக்கப்பாடு காண்பதில் ஜெயவர்த்தனாவிடம் நேர்மையும் அரசியல் உறுதிப்பாடும் இருக்கிறது என நான் மிகையாக மதிப்பீடு செய்துள்ளேன்.''* - என்கிறார். தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஜெயவர்த்தனா மீது மிகையாக நம்பிக்கை வைத்து இந்தியா செயற்பட்ட பொழுதும், ஜெயவர்த்தனா பொறுத்த கட்டத்தில் தனது ஏமாற்று வித்தையைக் காண்பிக்கத் தவறவில்லை. வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு அரசியல் அதிகாரம் வழங்க மறுத்து, இந்திய - இலங்கை ஒப்பந்தக் கடப்பாடுகளை அப்பட்டமாக மீறினார் அவர். ஜெயவர்த்தனாவின் இந்த நம்பிக்கைத் துரோகத்தால் இந்திய இராஜதந்திரம் மாபெரும் பின்னடைவைச் சந்தித்தது.

(தொடரும்...)




மன்னார் மாவட்ட புகைப்படப்பிடிப்பாளர்களினால் 'ஒளிக்கலை ஒன்றியம்' எனும் பெயரில் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. மன்னார் அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரியவின் வழிகாட்டலில் மன்னார் பிரதேச செயலாளரின் ஆலோசனைக்கு இணங்க இந்தச் சங்கம் அரசாங்க சட்டத்திட்டங்களுக்கு அமைவாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான பதிவை புகைப் படப் பிடிப்பாளர்கள் மன்னார் பிரதேச செயலாளர் வசந்தகுமாரிடமிருந்து பெறுவதைப் படத்தில் காணலாம். (இ-112)



வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்ற போது விருந்தினராகக் கலந்து கொண்ட நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ.பிரியந்த வெற்றியாளருக்கு பரிசில் வழங்கினார். (ஐ-40)



புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட வித்தியாலயத்துக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் தனது மாகாண சபை உறுப்பினர் நிதியில் இருந்து பெறுமதியான நிழல்பட இயந்திரத்தை வித்தியாலய அதிபர் திருமதி சி.இராசரத்தினத்திடம் அண்மையில் கையளித்தார். (ஐ-8)





நஸ்ரியா அஜித் எழுதிய அவரது மூன்றாவது படைப்பான அவலங்கள் என்ற பெண்களின் கதை சார்ந்த நூல் வெளியீட்டு விழா யாழ்.பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் பொ.தயானந்தன் கலந்து கொண்டார்.

நூலின் முதற்பிரதியை யாழ்.பிரதேச செயலர் பொ.தயானந்தன் வெளியிட்டு வைக்க யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் வி.மகேந்திரராசா பெற்றுக் கொண்டார். (ஐ-21-19)



தந்தை செல்வா அகில இலங்கை சமூக அபிவிருத்தி மன்றத்தால் தெரிவு செய்யப்பட்ட 75பயனாளிகளுக்கு இலவசமாக மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வு அண்மையில் ஏழாலை தெற்கு பாரதி முன்பள்ளியில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டு மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார். (ஐ-21)




மன்னார் மாவட்டத்தில் மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாலையடிப்புதுக்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவியாக அப்பியாசக் கொப்பிகள் வழங்கினார் அமைச்சர் பா.டெனிஸ்வரன். (ஐ)



கோப்பாய் வடக்கு முதியோர் சங்க ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டவர்களைப் படத்தில் காணலாம்.





நெல்லியடி சன சமூக நிலையத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் பரிசளிப்பு விழாவும் நெல்லியடி மத்திய கல்லூரி மண்டபத்தில் க.கிருஷ்ணராஜா தலைமையில் நடைபெற்றன. புலம்பெயர்ந்து வாழும் உறவுகளின் அனுசரணையில் ஐந்தாம் ஆண்டு, க.பொ.த. சாதாரணதரம், க.பொ.த. உயர்தரம் ஆகியவற்றில் சித்தி எய்திய மாணவர்களுக்கும், பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கும் நிதி உதவிகள் வழங்கப்பட்டன. மேலும் 18 மாணவர்களுக்கு சைக்கிள்களும் வழங்கப்பட்டன. (ஐ-40)

# பலாலி விமான நிலைய எல்லைகளை விஸ்தரிக்காமல் அதனைத் தரம் உயர்த்துவதற்கு இந்தியா உறுதி தந்தது!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தகவல்

யாழ்ப்பாணம், பெப்.18

பலாலி விமான நிலைய எல்லைகளை விஸ்தரிக்காமல் அதனைத் தரம் உயர்த்துவதற்கு இந்தியா ஏற்கனவே உறுதி மொழி தந்திருப்பதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் உள்ள தங்களது அலுவலகப் பணிமனையில் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டின் போதே இந்தக் கருத்தை அவர் தெரிவித்தார்.

பலாலி விமான நிலையத்தைத் தரம் உயர்த்தல் மற்றும் விஸ்தரிப்புக்கென சுமார் ஆயிரத்து அறுநூறு ஏக்கர் விஸ்தீரணக் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன என வெளிவந்த செய்திகள் தொடர்பாகச் செய்தியாளர் ஒருவர் வினா எழுப்பினார். அதன்போதே அவர் இவ்வாறு தகவல் வெளியிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு, அதனைச் சர்வதேச தரத்துக்கு உயர்த்துதல் ஆகியவை தொடர்பான பணிகளை இந்தியாவுக்குக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்ட வேளையில், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதுவர் நடராஜனை, தமிழ் மக்கள் பேரவை சார்பில் நாங்கள் சந்தித்த போது அந்த விடயம் தொடர்பாகப் பேசினோம்.

அப்போது துணைத் தூதுவரே ஒரு விடயத்தை எம்மிடம் தெளிவாகக் கூறியிருந்தார். இராணுவ விஸ்தரிப்புக்கள், ஆக்கிரமிப்புகள் தொடர்வதற்கு முன்னர் ஆரம்பத்தில் பலாலி விமான நிலையத்துக்கென இருந்த எல்லைகளுக்கு வெளியில் ஓரங்குல நிலத்தைக் கூட அந்த விமான நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்காக தாங்கள் எடுக்கமாட்டார்கள் என்று அவர் வாக்குறுதி அளித்திருந்தார்.

ஆனால், இன்று இலங்கை அரசும், இராணுவமும் வேறு கோணத்தில் செயற்படுகின்றன. அவை ஏற்கமுடியாதவை.



நாங்கள் துணைத் தூதுவர் நடராஜனிடம் ஒரு கோரிக்கையை- யோசனையை- முன் வைத்திருந்தோம். அந்த விமான நிலையத்தைப் பலாலியில் வைத்து விஸ்தரிக்காமல் வேறு ஓர் இடத்துக்கு - மக்கள் குடியிருப்புக்கள் அதிகம் பாதிப்புறாத இடத்துக்கு - பொதுமக்களுக்கு வசதியான இடத்துக்கு- எல்லாப் பக்கங்களில் இருந்தும் அந்த விமான நிலையத்துக்கு மக்கள் போய் வரக்கூடிய இடத்துக்கு - விசேடமாக வன்னி மாநிலத்துக்கு - அதனை மாற்றுவது பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்தோம்.

அதனை விடுத்து, பலாலியைத்தான் தரம் உயர்த்த வேண்டும் என்றால் நிச்சயம் அதைப் பயன்படுத்தி அந்தப் பிரதேசத்தை முழுமையாக சுவீகரிக்க - ஆக்கிரமிக்க - முயல்வார்கள் என்பது திண்ணம். அதையும் அவரிடம் கூறினோம்.

அந்த ஒரு பின்னணியில் தான் பலாலி விமான நிலையத்தைத் தரம் உயர்த்தும் பொறுப்பு இந்தியாவிடம் ஒப்படைக்கப்படுமானால், விமான நிலையத்துக்கென ஆரம்பத்தில் இருந்த நிலத்துக்கு மேல் ஓர் அங்குலம் கூட எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்ற வாக்குறுதியைத் துணைத் தூதுவர் எமக்குத் தந்தார்.

அந்த விமான நிலையம் அங்கிருந்து தான் தரம் உயர்த்தப்பட்டு செயற்படப் போகின்றது என்றால், இந்தியாவின் நலன்களின் அடிப்படையில் பார்க்கையில் அது வேறு ஒருவரின் கைகளுக்குப் போக முடியாது.

அது எங்களுக்கும் விளங்கும். அது வேறு ஒருவரின் கைகளுக்குப் போவதை நாங்களும் அனுமதிக்க மாட்டோம். ஆனால், எங்கள் மக்களைப் பாதிக்கும் விதத்தில் யாரும் அங்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது. அதில் நாம் மிகத் தெளிவாக இருக்கின்றோம்.

பலாலி விமான நிலையத்துக்குரிய நிலத்துக்கு மேலதிகமாக ஒரு சில ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதைக் கூட நாம் ஏற்கமாட்டோம். அத்தகைய முயற்சிகள் எடுக்கப்படுமானால் நாம் அதை எதிர்த்துப் போராடுவோம்.- என்றார்.

## நாவாந்துறை லூர்து அன்னை கெபியின் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், பெப்.18

நாவாந்துறை லூர்து அன்னை கெபி, முதலாம் ஆண்டு நிறைவு விழாத் திருப்பலி இன்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெறவுள்ளது.

பிரான்ஸ் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட லூர்து அன்னையின் திருவுருவச் சிலையும், ஆசியாவில் இருந்து முதன்முறையாகக் கொண்டு வரப்பட்ட லூர்து அன்னையின் பாதம் பட்ட கெபிக் கல்லும் அபிஷேகம் செய்யப்பட்டு நிறுவப்பட்ட இந்தக் கெபி கடந்த வடம் யாழ். ஆயர் ஜஸ்ரின் பேனார்ட் ஞானப்பிரகாசம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

புதுமைகள் மிகுந்த இந்த லூர்து அன்னையின் கெபிக்கான ஆண்டு நிறைவு விழாத் திருப்பலி பங்குத் தந்தை அருட்பணி அன்ரனி பாலா மற்றும் அருட்பணி ஸ்ரீபன், அருட்பணி மைக்கல் ராஜா ஜீசஸ் ஆகியோர் தலைமையில் இடம்பெறும் என்று பங்குத் தந்தை தெரிவித்துள்ளார். (இ-8)

# உள்நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு இல்லை அதிக விலைக்கு விற்போர் மீது நடவடிக்கை

## வர்த்தக அமைச்சர் ரிசாட் எச்சரிக்கை

கொழும்பு, பெப்.18

உள்நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு இல்லை என்று கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மொத்த வியாபாரச் சந்தையில் போதியளவு அரிசி கையிருப்பில் இருந்த போதும் தட்டுப்பாடு என்று கூறி அதிக விலைக்கு விற்கும் வியாபாரிகளுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புறக்கோட்டை 5 ஆம் குறுக்குத்தெருவில் உள்ள மொத்த வியாபார அரிசிக் கடைகளுக்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவர் மற்றும் அதிகாரிகளுடன் இணைந்து திடீரென பயணம் செய்த அமைச்சர், அரிசி நிலைவரங்கள் மற்றும் விலைகள் தொடர்பில் கேட்டறிந்தார். இதன்போது புறக்கோட்டை மொத்த வியாபாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுடனும் அமைச்சர் கலந்துரையாடினார். இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர்:-



புறக்கோட்டை சந்தையில் மொத்த வியாபார நிலையங்களில் அரிசி தாராளமாக இருக்கின்றது. விலைகள் மாறுபட்டுள்ள போதும் நிர்ணய விலையை விட வியாபாரிகள் சில்லறை வியாபாரிகளுக்கு 5 ரூபா அல்லது 6 ரூபாவுக்குக் குறைவாகவே விற்பனை செய்கின்றனர். எனினும், அரிசிக்குத் தட்டுப்பாடு என்று போலிப் பிரசாரத்தை மேற்கொண்டு விலையைக் கூட்டி விற்பதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அரசு ஒரு போதும் இடமளிக்காது.

ஜனாதிபதியின் ஆலோசனையின்பேரில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அரிசியின் சீரான விநியோகம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதுதொடர்பில் முறைப்பாடுகள் இருந்தால் 1977 என்ற இலக்கத்துக்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையுடன் தொடர்பு கொள்ள முடியும். இதற்கென விசேடமாக நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரிகள் உடனுக்குடன் உரிய நடவடிக்கை எடுப்பர்.

இறக்குமதி அரிசி தொடர்பில் இறக்குமதியாளர்கள் எவ்வளவு தொகையை எங்கிருந்து இறக்குமதி செய்து யாருக்குக் கொடுக்கின்றார்கள் என்று கண்காணிப்பதற்கும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சந்தையில் இறக்குமதி அரிசியையும் உள்ளூர் அரிசியையும் எத்தகைய விலை நடைமுறையில் விற்பனை செய்கின்றார்கள் என்பதைக் கண்காணிப்பதற்கும் நாம் அதிகாரிகளைக் களத்தில் இறங்கியுள்ளோம். அரிசியை மோசடியாக விற்பனை செய்யும் இறக்குமதியாளர்கள் கண்டுபிடிக்கப்படுவார்களானால் அவர்களுடைய இறக்குமதி அனுமதிப்பத்திரத்தை ரத்துச் செய்வோம்.

உள்ளூர் நெல் உற்பத்தியாளர்களின் கோரிக்கைக்கு இணங்க இன்னும் சில தினங்களில் வாழ்க்கைச் செலவுக்கான அமைச்சரவை உப குழுக்கள் கூடி உள்ளூர் உற்பத்தியாளர்களின் நன்மையைக் கருத்திற் கொண்டு நியாயமான விலையை நிர்ணயிக்கும் என்று குறிப்பிட்டார். (எ)

# சாயி மனித மேம்பாட்டுக் கல்விமுறைக் கண்காட்சி

## வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

சத்தியசாயி கல்வி நிறுவனம் நடத்தும் மனித உன்னதத்தை நோக்கிய மனித மேம்பாட்டுக்கல்விமுறைக் கண்காட்சி நாளை 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை காலை 9 மணியிலிருந்து மாலை 4மணிவரை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இடம்பெறும்.

முதலாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக சத்திய சாயி கல்வி நிறுவனப் பணிப்பாளர் வைத்தியர் வி.ஜெகநாதனும், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை சத்தியசாயி சர்வதேச நிறுவன மத்திய சபையின் தலைவர் விக்கினராசா மனோகரன், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி எஸ். பாலராணி ஆகியோர் கலந்து கொள்வர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.இரவீந்திரன், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம், சத்திய சாயி சர்வதேச நிறுவன தேசிய கல்வி அமைப்பாளர் என்.புகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

செவ்வாய்க்கிழமை இறுதி நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் என்.தெய்வேந்திரராசா, சிறப்பு விருந்தினராகக் கரவெட்டி கோட்டக்கல்வி அலுவலர் கே.கே. யோகநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இக்கண்காட்சியைப் பார்வையிட்டு மனித உன்னதத்தை நோக்கிப் பயணிக்க வருமாறு வடபிராந்திய சத்திய சாயி நிறுவனத் தலைவர் அழைத்துள்ளார்.

# தமிழக சிறைக்கு மாற்றப்படுவாரா சசிகலா?

## அவருடன் வழக்கறிஞர்கள் ஆலோசனை

பெங்களூர், பெப்.18

சசிகலா உள்ளிட்ட மூவரையும் பெங்களூரில் இருந்து தமிழகச் சிறைக்கு மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காகச் சிறையில் சசிகலாவுடன் வழக்கறிஞர்கள் ஆலோசனை நடத்தியுள்ளதுடன், ஆவணங்கள் சிலவற்றில் கையெழுத்தும் பெற்றுள்ளனர்.

மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு மேன்முறையீட்டு வழக்கில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் கடந்த புதன்கிழமை மாலை பெங்களூரில் உள்ள பரப்பன அக்ரஹாரா மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோரின் வழக்கறிஞர்களான செந்தில், அசோகன், மூர்த்தி ராவ் ஆகியோர் நேற்று முன்தினம், காலை பெங்களூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலாவைச் சந்தித்துள்ளனர்.



அப்போது சொத்துக்குவிப்பு மேன்முறையீட்டு வழக்கில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரும் மனுவைத் தாக்கல் செய்வது தொடர்பாகவும் ஆலோசனை நடத்தியுள்ளனர். இது தொடர்பான ஆவணங்களில் மூவரிடமும் கையெழுத்துப் பெற்றுள்ளனர்.

சிறையில் சசிகலா கேட்ட ஏ.சி. அறை, வீட்டுச் சாப்பாடு உட்பட பல்வேறு வசதிகள் செய்யப்படவில்லை. எனவே சசிகலா சிறையில் கஷ்டப்படுகிறார் என்று வழக்கறிஞர்களிடம் இளவரசி தெரிவித்துள்ளார்.

இதனால், வழக்கறிஞர்கள் சட்ட விதிமுறைகளின்படி சசிகலா, இளவரசி உள்ளிட்டோரை பெங்களூர் சிறையில் இருந்து தமிழகத்தில் உள்ள சிறைக்கு மாற்றுவது தொடர்பாகவும் ஆலோசனை நடத்தியுள்ளனர். அதற்கு சசிகலாவும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி நடைபெறுவதால் கர்நாடக சிறையில் இருந்து தமிழகத்துக்கு மாற்றுவது சிரமமாக இருக்காது. கர்நாடக அரசும், சிறைத்துறையும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காது என்றும் வழக்கறிஞர்கள் நம்பிக்கை அளித்துள்ளனர்.

இதையடுத்து வழக்கறிஞர்கள் செந்திலும், அசோகனும் உடனடியாக சிறையை மாற்றுவது தொடர்பான பணிகளை முடுக்கி விடுவதாகவும் உறுதி அளித்துள்ளனர்.

மேலும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மறு ஆய்வு செய்யக் கோரும் மனுவையும் விரைவில் தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

இதற்கு முன்னர் 10 லட்சத்துக்கு அதிகமாக வருமான வரி செலுத்தும் சசிகலா, இளவரசி உள்ளிட்டோருக்கு பெங்களூர் சிறையில் வழங்க வேண்டிய வசதிகள் தொடர்பாக கர்நாடக சிறைத்துறை அதிகாரிகளிடம் வழக்கறிஞர்கள் மனு அளித்துள்ளனர்.

இதனிடையே ,நேற்று முன்தினம் மாலை பரப்பன அக்ரஹாரா சிறை வளாகத்துக்கு சென்ற கர்நாடக அ.தி.மு.க . செயலாளர் புகழேந்தி, தமிழக முதல்வராக எடப்பாடி பழனிச்சாமி பதவியேற்ற தகவலைக் கடிதமாக எழுதி சிறைக் காவலர்கள் மூலமாக சசிகலாவுக்கு கொடுத்து அனுப்பியுள்ளார்.

இதேவேளையில், பெங்களூரில் தங்கியுள்ள சசிகலாவின் கணவர் ம. நடராஜன், உறவினர்கள் டாக்டர் வெங்கடேஷ், டாக்டர் சிவகுமார் உள்ளிட்டோர் சசிகலாவைச் சிறைக்குச் சென்று சந்திக்கவில்லை.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஜெயலலிதா சிறையில் அடைக்கப்பட்டு இருந்தபோது திரண்ட அளவுக்கு அ.தி.மு.க. நிர்வாகிகளோ, தொண்டர்களோ சசிகலாவைக் காணச் சிறைக்கு செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழக சட்டப் பேரவையில் இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு!

### எண்ணிக் கணிக்கும் முறையில்




சென்னை, பெப்.18

தமிழக சட்டப்பேரவையில் இன்றைய தினம் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தனது பெரும்பான்மையை பேரவையில் 15 நாள்களுக்குள் நிரூபிக்க வேண்டும் என்று நேற்றுமுன்தினம் ஆளுநர் உத்தரவிட்டார்.

இந்த நிலையில், முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு கோருகிறார். இதற்காக பேரவை இன்று 11 மணிக்கு கூடுகிறது என்று பேரவைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் சட்டப் பேரவைச் செயலாளர் ஜமாலுதீன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்-

சபாநாயகர் தனபால் இன்று முற்பகல் 11 மணிக்கு சட்டப் பேரவையைக் கூட்ட இருக்கிறார் என அறிவித்துள்ளார்.

அப்போது, தமிழகத்தில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அமைச்சரவை மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படும் என்று ஜமாலுதீன் குறிப்பிட்டுள்ளார்.

பேரவை கூடியதும், அமைச்சரவை மீதான நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தை முதல்வர் எடப்பாடி கே.பழனிச்சாமி முன்மொழிவார். இந்தத் தீர்மானம் வழிமொழியப்பட்டு அது வாக்கெடுப்புக்கு விடப்படும்.

பல்வேறு அரசியல் திருப்பங்களுக்கு இடையே நடைபெறும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் என்பதால் குரல் வாக்கெடுப்புக்குப் பதிலாக எண்ணிக் கணிக்கும் முறையே பின்பற்றப்படும் என்று சட்டப் பேரவைச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எடப்பாடி பழனிச்சாமி பெரும் பான்மையை நிரூபிப்பாரா என அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.


இந்நிலையில், இன்று மாலை 4 மணிக்கு சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் தலைமையில் எம்.எல்.ஏக்கள் ஆலோசனை கூட்டம் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய ஆட்சியை அகற்றுவோம்!

## ஜெயலலிதா நினைவிடத்தில் ஓ.பி.எஸ். சபதம்

சென்னை, பெப்.18

முதல்வர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான ஆட்சியை நீக்கிவிட்டு, ஜெயலலிதாவின் உண்மையான ஆட்சியை அமைக்க சபதம் எடுத்துள்ளேன் என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.



சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள ஜெயலலிதாவின் நினைவிடத்துக்கு நேற்றுமுன்தினம் இரவு 7.45 மணியளவில் ஓ.பன்னீர்செல்வம், முன்னாள் அமைச்சர்களான இ.மதுசூதனன், கே.பி.முனுச்சாமி, முன்னாள் பேரவைத் தலைவர் பி.எச்.பாண்டியன் உள்ளிட்டோர் சென்றுள்ளனர்.

நினைவிடத்தில் மரியாதை செலுத்திய பின்னர் பன்னீர்செல்வம் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு:-

2011 ஆம் ஆண்டில் சசிகலா குடும்பத்தினரை ஜெயலலிதா தனது வீட்டில் இருந்து வெளியேற்றினார்.

3 மாதங்களுக்குப் பின்னால் சசிகலாவை மட்டும்தான் உதவியாக இருப்பதற்கு ஜெயலலிதா அனுமதித்தார். சசிகலா குடும்பத்தினர் யாரையும் உயிரோடு இருக்கும்வரை வீட்டில் அனுமதிக்க மாட்டேன் என்று கூறி அவரது குடும்பத்தினரை அ.தி.மு.கவின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கிவிட்டார்.

ஜெயலலிதா இறக்கும் வரை சசிகலா குடும்பத்தினர் மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

எடப்பாடி பழனிசாமி தலைமையில் பதவியேற்றிருக்கும் ஆட்சி ஜெயலலிதாவின் உண்மையான விசுவாசத்துடன் கூடிய ஆட்சியாக இல்லை. சசிகலா குடும்பத்ினுடைய ஆட்சிதான் பதவியேற்றுள்ளது.


இந்த ஆட்சியை நீக்கி, மீண்டும் ஜெயலலிதாவின் ஆட்சியை நிறுவுவோம். இந்தச் சபதத்தைக் கூடிய விரைவில் நிறைவேற்றுவோம்.

அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் நியாயமான முடிவுகளை எடுக்க வலியுறுத்தும் வகையில், அவர்கள் சார்ந்திருக்கும் தொகுதிகளில் பேரணி நடைபெறும்.

ஜெயலலிதாவால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் அவர் வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டு கட்சி நடத்தும் துர்ப்பாக்கிய சூழலை அகற்ற வேண்டும்.

தமிழகத்தில் ஏழரை கோடி மக்களும், அ.தி.மு.க . தொண்டர்களும் விரும்பாத, விரோத ஆட்சி தூக்கி எறியப்படும். அது வரை ஓயமாட்டோம். கடந்த 10 நாள்களாக எந்த செயற்பாடுகளும் முறையாக நடைபெறவில்லை. ஒரு சதவீத மக்கள்கூட விரும்பாத மக்கள் விரோத ஆட்சியை அகற்ற மக்கள் சபதம் எடுத்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

# சசிகலாவை அ.தி.மு.கவிலிருந்து நீக்கினார் மதுசூதனன்!



## மாறிமாறி பதவி நீக்கம்

சென்னை, பெப்.18

சசிகலாவை அ.தி.மு. க.விலிருந்து அவை தலைவர் மதுசூதனன் நீக்கியுள்ளார்.

அ.தி.மு.க. அவைத் தலைவராக இருந்த மதுசூதனன், பன்னீர் செல்வத்துக்கு ஆதரவு அளித்தார். இதனால் மது சூதனனை அ.தி.மு. கவிலிருந்து நீக்குவதாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா அறிவித்திருந்தார். இதனால், யாருக்கு அதிகாரம் உள்ளது என்பதில் குழப்பம் நிலவி வருகிறது.

இந்நிலையில், அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் மற்றும் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து சசிகலாவை நீக்குகிறேன் என்று மதுசூதனன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தி வருவதால் நீக்கப்படுகிறார். வெங்கடேஷ், தினகரன் ஆகியோரும் கட்சியிலிருந்து நீக்கப்படுகின்றனர். ஜெயலலிதாவால் நீக்கப்பட்ட தினகரன், வெங்கடேஷ் ஆகியோர் எந்த அதிகாரமும் இல்லாமல் கட்சியில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மனிதக் குரங்கைக் கொன்று சமைத்துச் சாப்பிட்ட மூவர் கைது



ஜகார்த்தா, பெப்.18

இந்தோனேசியாவில் மனிதக் குரங்கைக் கொன்று சமைத்துச் சாப்பிட்ட 3 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அழியும் வன விலங்குகள் பட்டியலில் மனிதக் குரங்குகளும் உள்ளன. எனவே அவை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்தோனேசியாவில் அவை பாமாயில் விளை நிலங்களில் வசிக்கின்றன.

இந்த நிலையில் அங்கு சுற்றித் திரிந்த ஒரு மனிதக் குரங்கைப் பிடித்த 3 பேர் அதனைக் கொன்று இறைச்சியாக வெட்டி அவற்றைச் சமைத்து சாப்பிட்டனர்.

அவர்கள் பாமாயில் மரவிவசாயப் பண்ணையில் பணிபுரியும் ஊழியர்கள் இது பற்றிய தகவல் கிடைத்ததும் பொலிஸார் அங்கு விரைந்து சென்று 3 பேரையும் கைது செய்தனர்.

கொன்று சமைக்கப்பட்ட மனிதக் குரங்கின் எலும்புகள் மற்றும் காயவைக்கப்பட்ட இறைச்சி போன்றவை பறிமுதல் செய்யப்பட்டன. (எ)

## ஊழலுக்கு எதிரான முன்மொழிவுகள் தொடர்பில் ருமேனியாவில் சர்வஜன வாக்கெடுப்புக்கு அனுமதி

### அந்நாட்டு நாடாளுமன்று அங்கீகாரம்

ஊழலுக்கு எதிரான மறு சீரமைப்புகள் அடங்கிய முன்மொழிவுகள் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு ருமேனிய நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வலதுசாரி ஜனாதிபதி க்ளவுஸ் யோகானிஸ் முன்வைத்த இந்தத் திட்டத்துக்கு ரொமேனிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர்.

463 ஆசனங்களைக் கொண்ட ருமேனிய நாடாளுமன்றத்தில் இந்த முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டபோது 310 நாடாளுமன்ற உறுப்பினர்களே பிரசன்னமாகியிருந்தனர். அத்துடன் அந்த முன்மொழிவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.




இதன்பிரகாரம் சர்வஜென வாக்கெடுப்பை நடத்துவதற்கான திகதியை ஜனாதிபதி தீர்மானிக்கவுள்ளார் என்று ருமேனியத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

சில ஊழல் குற்றங்களை, குற்றங்களின் பட்டியலில் இருந்து நீக்கும் வகையில் பிரதமர் பிறப்பித்த ஆணைக்கு எதிராக தொடர் ஆர்ப்பாட்டங்களில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஊழலுடன் தொடர்புபட்ட அரசியல்வாதிகளைப் பாதுகாக்கும் வகையில் இந்த ஆணை அமைந்துள்ளதாக மக்கள் கருதுக்கின்ற நிலையில், அதனை பிரதமர் வாபஸ் பெற்றிருந்தார்.

எனினும் தற்போதைய அரசு பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி ருமேனிய மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## ஐ.நா.அமைதிப்படையின் புதிய தலைவராக ஜீன் பியர்




நியூயோர்க், பெப்.18

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படை அமைப்பின் புதிய தலைவராக ஜீன் பியர் லாக்ரோயிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். பிரான்ஸைச் சேர்ந்த அவரை ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டரெஸ் நியமித்துள்ளார்.

கடந்த 6 ஆண்டுகளாக அந்தப் பொறுப்பை வகித்து வரும் ஹெர்வ் லாட்சூஸ், எதிர்வரும் மார்ச் மாதத்துடன் ஓய்வு பெற இருப்பதையடுத்து, அந்தப் பதவிக்கு ஜீன்-பியர்லாக்ரோயிஸ், நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் சபையில் உள்ள அமைதிப்படை அமைப்பு, அமைதியற்ற சூழ் நிலை நிலவும் நாடுகளில் முகாமிட்டு அமைதி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## I,004 அடி உயரத்தில்...!



ரஷ்யாவின் பிரபல மொடல் அழகி ஏஞ்சலினா நிக்கோலு டுபாய்க்குச் சென்று அங்குள்ள உயரமான கட்டடங்களில் ஒன்றான கயான் கட்டடத்தின் உச்சிக்கு தன் ஆண் நண்பருடன் சென்றார். 1,004 அடி உயர அந்தக் கட்டடத்தின் உச்சியின் விளிம்பில் உயிரைப் பணயம் வைத்து ஆண் நண்பரின் கையைப் பிடித்துக்கொண்டு கீழே தொங்கியபடி படம் எடுத்துக்கொண்டார். அப்போது, பாதுகாப்புக்காக எந்தச் சிறப்பு ஏற்பாடுகளோ அல்லது அந்தப் படங்களை எடுத்துக்கொள்ள அனுமதியோ பெறவில்லை. தனது துணிச்சலை உலகுக்கு தெரியப்படுத்தும் வகையில் அந்தப் படங்களை அவர் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டார். அதையடுத்து அந்தப் படங்களுக்கு கடும் கண்டனங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## ட்ரம்பின் தீர்மானம் சரியானதே சிரிய ஜனாதிபதி அசாட் தெரிவிப்பு




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் தீர்மானம் சரியானதே என்று சிரிய ஜனாதிபதி பசர் அல் அசாட் தெரிவித்துள்ளார். ட்ரம்ப் பயணத்தடை விதித்தது பயங்கரவாதிகளுக்கு அன்றி சிரிய மக்களுக்கு கிடையாது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்குலக நாடுகளுக்குள் ஊடுருவ முயற்சிக்கும் தீவிரவாதிகளை தடுக்கவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக ஐரோப்பிய வானொலிச் சேவை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதிகளைத் தடுக்கும் நோக்கில் ட்ரம்ப் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என்றே தாம் கருதுகிறார் என்றும், சிரிய மக்களுக்கு எதிரானதல்ல என்றும் குறிப்பிட்டுள்ள அவர் ட்ரம்பின் சிரியா குறித்த கொள்கை பற்றி தமக்கு இன்னும் போதிய தெளிவு கிடையாது. அதனால் கருத்து வெளியிடப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார். (எ)

## அரை நூற்றாண்டுக்குப் பின்னர் லண்டனில் நீராவி ரயில் சேவை



லண்டன், பெப்.18

அரை நூற்றாண்டுக்குப் பின்னர் லண்டனில், முக்கியமான ரயில் தடத்தின் கால அட்டவணைக்குள் நீராவி ரயில் ஒன்று முதல் தடவையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

'டொர்னாடோ' என்ற இந்த நீராவி ரயில், நாட்டின் வடபகுதியில் அழகிய இயற்கை வனப்பு மிக்க பாதையில் பன்னிரண்டு சேவைகளை மேற்கொண்டது.

ஒரு வருடத்துக்கு முன்னதாக அங்கு ஏற்பட்ட நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட இந்த ரயில் பாதை மீளத் திறக்கப்பட்டதை அடுத்து இந்த சேவை நடத்தப்பட்டது. பயணிகளுக்கும் இந்த ரயில் பயணம் நல்ல மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

## பிரிட்டன்மீது வெறுப்புணர்வுக் குற்றங்கள்

### ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவதை அடுத்து

லண்டன், பெப்.18

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகுவதற்கு பிரிட்டன் தீர்மானத்தை அடுத்து வெறுப்புணர்வுக் குற்றங்கள் என்றுமில்லாத வகையில் அதிகரித்துள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகுவதற்கான சர்வஜென வாக்கெடுப்புக்குப் பின்னரான மூன்று மாதங்களில் இந்த அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக பிரிட்டன் மற்றும் வேல்ஸ் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இதன் பிரகாரம் ஜூலை மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரை 14 ஆயிரத்துக்கும் அதிகமான வெறுப்புணர்வுக் குற்றங்கள் பதிவாகியுள்ளன.

சில பிரிவுகளில் 50 வீதத்தை விட அதிகமாக வெறுப்புணர்வுக் குற்றங்கள் அதிகரித்துள்ளன என்று புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவதற்கான பேச்சுகள் ஆரம்பித்த பின்னர் வெறுப்புணர்வுக் குற்றங்களை எதிர்கொள்ள பிரிட்டன் தயாராக வேண்டும் என்று மனித உரிமைகள் குழுக்கள் வலியுறுத்தியுள்ளன.

மெட்ரோபொலிட்டன், க்ரேட்டர் மென்செஸ்டர் மற்றும் மேற்கு யோர்க்செயார் பொலிஸ் பிரிவுகளில் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடைந்த மூன்று மாதங்களில் ஆயிரத்துக்கும் அதிகமான வெறுப்புணர்வுக் குற்றங்கள் பதிவாகியுள்ளன. (எ)

# வடக்கில் முதன்முறையாக மகளிர் கிரிக்கெட் ஆட்டம்!

## மாவட்ட ரீதியில் இன்று, நாளை, மறுதினம்


யாழ்ப்பாணம்,பெப்.18

வடமாகாணத்தில் முதன் முறையாக மகளிர் வன்பந்து கிரிக்கெட் ஆட்டங்கள் இப்போது நடைபெறவிருக்கின்றன.

வடக்கு மாவட்டங்கள் தனித்தனியாகப் பயிற்சியளித்து மகளிர் கிரிக்கெட் கழக அணிகளையும் மாவட்ட அணிகளையும் தயார் செய்து வைத்திருக்கும் சூழ்நிலையில், மாவட்ட மகளிர் அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் - இன்னிங்ஸ் ஆட்டங்களைக் கொண்ட - சுற்றுப் போட்டி ஒன்றை 'ஸ்ரீ லங்கா கிரிக்கெட்' அமைப்பு ஏற்பாடு செய்திருக்கின்றது.

மாவட்ட ரீதியான ஆட்டங்களைத் தொடர்ந்து அவற்றின் அடிப்படையில் மாகாண அணிகள் தெரிவு செய்யப்பட்டு, மாகாண அணிகளுக்கு இடையிலான சுற்றுப் போட்டி ஆட்டங்கள் நடைபெறும் என்றும்- இந்த மாவட்ட, மாகாணப் போட்டிகளின் அடிப்படையில் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி தெரிவு செய்யப்படும் என்றும்- 'ஸ்ரீ லங்கா கிரிக்கெட்' அமைப்பின் வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்ட மகளிர் அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் மூன்று மாவட்ட அணிகள் பங்கு பற்றுகின்றன.



யாழ்ப்பாண மாவட்ட மகளிர் அணி தனியாகவும், கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்கள் ஒரு கூட்டு அணியாகவும், வவுனியா - மன்னார் மாவட்டங்கள் மற்றொரு கூட்டு அணியாகவும் இந்தச் சுற்றுப் போட்டியில் மோதுகின்றன.

கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களின் கூட்டு அணிகளுக்கும் யாழ்ப்பாண மாவட்ட அணிக்கும் இடையிலான ஆட்டம் இன்று காலை 9.30 மணி முதல் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

★கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களின் கூட்டு அணிகளுக்கும், வவுனியா - மன்னார் மாவட்டங்களின் கூட்டு அணிகளுக்கும் எதிரான ஆட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

★ யாழ்ப்பாண மாவட்ட அணிக்கும் வவுனியா - மன்னார் மாவட்டங்களின் கூட்டு அணிகளுக்கும் இடையிலான ஆட்டம் நாளை மறுதினம் (திங்கட்கிழமை) காலை 9.30 மணி முதல் யாழ்ப்பாணம், சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்த ஆட்டங்களை ஏற்பாடு செய்து, அவற்றுக்கான நிதி உதவிகளை வழங்கும் 'ஸ்ரீலங்கா கிரிக்கெட்' அமைப்பு, இந்த ஆட்டங்களில் வீராங்கனைகளின் பெறுபேறுகள், தரங்கள், கிரிக்கெட் ஆளுமை, தர விருத்திக்கான வாய்ப்புகள் ஆகியவற்றை நேரில் ஆராய்ந்து மதிப்பீடு செய்வதற்காக விசேட பிரதிநிதிகளையும் ஆட்டம் நடைபெறும் இடங்களுக்கு நேரில் அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(உ)

## ரியல் மாட்ரிட் வெற்றி!



மாட்ரிட், பெப்.18

நபோலி அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் உதைபந்து தொடரின் 'ரவுண்ட்-16' சுற்று முதல் போட்டியில் ரியல் மாட்ரிட் அணி வெற்றி பெற்றுள்ளது.

ஐரோப்பாவில் உள்ள உதைபந்து கிளப் அணிகளுக்கு இடையில் சம்பியன்ஸ் லீக் தொடர் இடம் பெற்று வருகிறது.

மாட்ரிட் நகரில் நடந்த 'ரவுண்ட்-16' சுற்றின் முதல் போட்டியில் நபோலி, கிறிஸ்டியானோ ரொனால்டோவின் ரியல் மாட்ரிட் அணிகள் மோதின.

போட்டியின் 8 ஆவது நிமிடத்தில் நபோலி வீரர் இன்சைன் ஒரு கோல் அடித்தார். இதற்கு, பென்சிமா (18 ஆவது நிமிடம்) பதிலடி கொடுத்தார். தன் பங்கிற்கு ரியல் மாட்ரிட் சார்பில் டோனி குரூஸ் (49 ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்க எதிரணி திணறியது. இந்த நேரத்தில், கேசிமிரோ (54 ஆவது நிமிடம்) ஒரு கோல் அடிக்க ரியல் மாட்ரிட் வலுப்பெற்றது.

கடைசி வரை போராடிய நபோலி அணியினரால் கூடுதலாக கோல் அடிக்க முடியவில்லை.

முடிவில், ரியல் மாட்ரிட் அணி 3-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இரு அணிகள் மோதும் 'ரவுண்ட்-16' சுற்றின் இரண்டாவது போட்டி அடுத்த மாதம் 7 ஆம் திகதி இத்தாலியின் மிலனில் உள்ள நேபில்ஸில் நடக்கவுள்ளது.

## இந்திய துணைத் தலைவர் பொறுப்பு அஸ்வினுக்கு வழங்காதது ஏன்?

சென்னை, பெப்.18

இந்திய நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் துணைத் தலைவர் பொறுப்பு குறித்து பரபரப்பு பேட்டி ஒன்றை அளித்துள்ளார்.

பிரபல நாளிதழுக்கு அஸ்வின் அளித்த பேட்டியில் தெரிவித்தவை வருமாறு:-

நான் அந்தக் கட்டத்தை யெல்லாம் கடந்து விட்டேன். அதாவது, நான் இதற்கு தகுதியானவன் எனக்கு இது அளிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது பற்றியும் என் கைகளில் இல்லாதது பற்றியும் யோசிக்கும் கட்டத்தை நான் கடந்து வந்து விட்டேன்.

தலைமைப் பொறுப் பின்றியே முன்னிலை வகிப்பேன். இந்திய வெற்றிகளில் நான்



முக்கிய பங்களிப்பு செய்து வருகின்றேன் இதுவே மிகப்பெரிய திருப்தி.

மேலும் நேர்மையாகக் கூற வேண்டுமெனில் துணைத் தலைவராவது பற்றி எனக்கே உறுதியான விருப்பம் இருக்கிறதா என்று தெரியவில்லை. நான் கடினமாக உழைத்து வருகிறேன். எனவே என் வழியில் வராத ஒரு விடயத்தை பற்றி நான் யோசிப்பது என் மன நிலைக்கு ஒப்பானதாக இல்லை என்றும் கூறியுள்ளார்.

## யாழ். கழகங்களுக்கு கிரிக்கெட் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கென 'ஸ்ரீ லங்கா கிரிக்கெட்' அமைப்பு வழங்கிய விளையாட்டு உபகரணங்களைக் கையளிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணம் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறவிருக்கின்றது.

அதற்கு முன்னதாக அதே மைதானத்தில் பிற்பகல் 2 மணி முதல் இருபதுக்கு 20 கிரிக்கெட் ஆட்டம் ஒன்றும் நடைபெறும்.

இந்த ஆட்டத்தில், ஏற்கனவே யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட பிரிவு III சுற்றுப் போட்டியில் முதலிடம் பெற்ற யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். மாவட்ட கிரிக்கெட் அணி மோதும். (உ)

## பாக். சுப்பர் லீக்கில் கலக்குகிறார் சங்கக்காரா!



கராச்சி, பெப்.18

இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரும், அணியின் முன்னாள் தலைவருமான குமார் சங்கக்காரா பாகிஸ்தான் சுப்பர் லீக் இருபதுக்கு 20 போட்டியில் அசத்தி வருகின்றார்.

பி.எஸ்.எல் போட்டியில் கராச்சி அணியின் தலைவராக உள்ள குமார் சங்கக்கார நேற்றுமுன்தினம் இடம் பெற்ற போட்டியின் போது அபார துடுப்பாட்டத்தை வெளிக்காட்டியுள்ளார்.

அந்த வகையில் 45 பந்துகளை எதிர்கொண்டு 65 ஓட்டங்களை சங்கா பெற்றார். அணியின் வீரர்கள் பெற்ற அந்த ஓட்ட எண்ணிக்கையில் இதுவே அதிகம்.

# கிரிக்கெட் மூலம் ஆஸி. - இலங்கை நட்புறவை வலுப்படுத்துவதற்கு பிரதமர் ரணில் வலியுறுத்து



மெல்போர்ன், பெப்.18

ஆஸ்திரேலிய - இலங்கை இடையிலானநட்புறவைவலுப்படுத்த கிரிக்கெட் விளையாட்டை சிறப்பாக பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிர மசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணி தற்போது ஆஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணத்தைமேற்கொண்டுள்ளது.

இந்நிலையில், கடந்த புதன் கிழமைஇலங்கைஅணிஆஸ்திரேலிய பிரதமர் அணியுடன் பயிற்சிப் போட்டி ஒன்றில் பங்குபற்றியது.

இந்நிகழ்வில் பங்குபற்றி உரையாற்றும்போதே பிரதமர் ரணில்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தச் சுற்றுத்தொடரில் இலங்கை அணியுடன் பயிற்சிப்போட்டியொன்றில்விளையாடுவதற்காக ஆஸ்திரேலியப் பிரதமரின் பதினொருவர் அணிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளமைமிகவும்முக்கியமான விடயமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


நிகழ்வில் கலந்து கொண்ட ஆஸ்திரேலிய பிரதமர் மெல்கம் டேர்ன்புல் கருத்துத் தெரிவிக்கையில்,

இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வெளிப்படுத்தும் அடையாளமாக இந்தப் போட்டி அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இந்தப்போட்டிமுடிவடைந்த பின்னர் இலங்கை - ஆஸ்திரேலிய பிரதமர்கள் இராப்போசன விருந்தில் கலந்துகொண்டனர்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இலங்கைமற்றும்ஆஸ்திரேலிய பிரதமர் பதினொருவர் அணிகளுக்கிடையிலான இருபதுக்கு-20 போட்டியில் இலங்கை அணி 5 விக்கட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

# இலங்கை - ஆஸ்திரேலியா இடையில் விளையாட்டுத்துறை உடன்படிக்கை!



ஆஸ்திரேலியாவிற்கும் இலங்கைக்கும்இடையில்விளையாட்டுத் துறைசார் அபிவிருத்தி உடன்படிக்கை ஒன்று கடந்த புதன்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற் கும், ஆஸ்திரேலியாவின் பிரதமர் மல்கம் டர்ன் புல்ஆகியோருக்குமிடையில் இடம்பெற்ற உத்தி யோகபூர்வ சந்திப்பு மற்றும் இருதரப்பு பேச்சுகளின் பின்னர் இந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

விளையாட்டுத்துறைசார்ந்தஇந்த அபிவிருத்தி உடன்படிக்கையில் ஆஸ்திரேலியாவின் விளையாட்டு மற்றும் சுகாதார அமைச்சர் கிரேக் ஹர்ன் மற்றும் அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் கையெழுத்து இட்டுள்ளனர்.

இந்த உடன்படிக்கையின்படி, இலங்கையின் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் விளையாட்டுத் துறைசார்பயிற்றுவிப்பாளர்கள், முகாமையாளர்கள், வைத்திய ஆலோசகர்கள், விளையாட்டுத் துறை நிபுணர்களுக்குச்சர்வதேசதரத்திலான பயிற்சிகளை வழங்குவதற்கும், அவற்றைப் பரிமாற்றம் செய்வதற்கும் உடன்பாடு கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மேலும், இருதரப்பு ஊக்கமருந்துப் பாவனை தொழில்நுட்பத்தை பகிர்ந்துகொள்வதற்கும் இந்த உடன்படிக்கை யின்போது எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

# முதல் இருபதுக்கு 20 இல் ஆஸியை வீழ்த்தியது இலங்கை

இலங்கை மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் நேற்று இடம்பெற்ற இரு பதுக்கு 20போட்டியில் இலங்கைஅணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

மெல்பர்னில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கைஅணி முதலில் ஆஸ்திரேலியா அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்த ஆஸ்திரேலிய அணி 168 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரோன்பின்ச்43, மைக்கல் கிளிங்கர்38ஓட்டங்களையும்பெற்றனர். லசித் மாலிங்க 29, ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களை வீழ்த்தினர்.

169 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 172 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது.

இலங்கை அணி சார்பில் அசேல குணரட்ன 52, டில்சான் முனவீர 44, நிரோசன் திக் வெல்ல 30 ஓட்டங்களைப் பெற்றனர்.

இறுதி ஓவர் வரை விறுவிறுப்பாகச்சென்ற இந்தப்போட்டியில் இலங்கை அணி வென்றது.

போட்டியின் நாயகனாக இலங்கை அணிசார்பில் 52 ஓட்டங்களைப்பெற்ற அசேல குணரட்ன தெரிவு செய்யப்பட்டார்.

இதன் அடிப்படையில், மூன்று போட்டிகளைக்கொண்ட இந்தத் தொடரில் 1:0 எனும் வகையில் இலங்கை அணி முன்னிலை பெற்றுள்ளது.

2ஆவது ரி20 போட்டிநாளை கீலொங்கில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி மாணவிகள் பங்களாதேஷ் சென்றனர்!

கிளிநொச்சி, பெப்.18

பங்களாதேஷில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண ரோல் போல் தொடருக்காக இலங்கை அணி சார்பில், தெரிவான கிளிநொச்சி மாணவிகள் பங்களாதேஷ் பயணமாகியுள்ளனர்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் உயர்தர மாணவிகளான துலக்சினி விக்னேஸ்வரன், சிறிகாந்தன் திவ்யா ஆகியோரே உலகக் கிண்ண ரோல் போல் போட்டியில் பங்குபற்றுகின்றனர்.

மேலும் மிக குறுகிய காலத்திற்குள் பயிற்சிகளைப் பெற்று, கடந்தவருட இறுதிப்பகுதியில் நடைபெற்ற தேசிய ரீதியிலான போட்டியில் கிளிநொச்சி மாவட்ட ரோல் போல் போட்டியில் தமது திறமையை வெளிப்படுத்தியிருந்தனர்.

அத்தோடு பெரியளவிலான வசதிகளோ, பிரத்தியேக உள்ளரங்கமோ இல்லாதநிலையில் தமதுபயிற்சியைமேற்கொண்டு 56 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்குபற்றவுள்ளஉலககிண்ண போட்டிவரைஇவர்கள்சென்றுள்ளனர்என்பதுகுறிப்பிடத்தக்கது.



## முதல்வருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். ஆஸ்பத்திரியின் இருதய நோய் தீவிர சிகிச்சைப் பிரிவின் கண்காணிப் பில் உள்ள அவரது உடல் நிலைமை இப்போது சீர் என்றும், எனினும் சில மருத்துவ ஊசிகளைக் கண்காணிப்பில் வைத் துச் செலுத்துவதற்காகவும் ஓய்வுக்காகவும் அவரை வைத்தியசாலையில் வைத்துக் கவனிக்க விரும்புகின்றோம் என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

நீதியரசர் விக்னேஸ்வரன் 1997 இல் இதயத்தில் 'வை பாஸ்' சத்திர சிகிச்சை செய்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தது. (உ)

## துப்பாக்கிச்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிதாக முளைத்திருக்கின்றது.

இந்த நிலப்பகுதி எல்லை போடப்பட்டோ, வேலி அமைத்தோ வரையறை செய்யப்படாமல் இருந்தது.

தற்போது மக்கள் தங்களுக்கு விடுவிக்கப்பட வேண்டும் எனக் கோரும் நிலப்பகுதிக்கு பக்கவாட்டில் இந்தக் காணிப் பகுதி உள்ளது. இதனூடாக இதுவரை மக்கள் சென்று வந்தனர். ஆனால் நேற்று திடீரென அதில் புதிய எச்சரிக்கைப் பலகை எழுந்துள்ளது.

அதில் 'இது விமானப் படையினரின் காணியாகும். தேவையில்லாமல் உட்செல்லல் தடை' என்றும் 'தேவையில்லாமல் சென்றால் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காவீர்கள்' என்ற விடயம் எழுத்துப்பிழையுடன் அறிவித்தலாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தங்களின் சொந்த காணிகளுக்குச் செல்வதற்காகத் தாங்கள் மேற்கொள்ளும் ஜனநாயகப் போராட்டத்தை நல்லாட்சி அரசு ஆயுத முனையில் நசுக்கமுனைகிறதுஎன்பதையே இது காட்டுவதாக மக்கள் தெரிவித் துள்ளனர். (2-81-70)

## இணைப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பான்மையின்றி வடக்குக் கிழக்கை ஒருபோதும் இணைக்கமுடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

'உயிரைப் போல நீரைப் பாதுகாப்போம்' என்ற தொனிப் பொருளிலான விசேட வேலைத் திட்டமொன்று நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துவிளக்கமளிக்கும் ஊடகவியலாளர்சந்திப்புநேற்று நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கு முஸ்லிம் மக்கள் இன்றும் எதிரான நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர்.

இரண்டுமாகாணங்களையும் இணைக்கவேண்டுமானால் நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை பெறப்பட வேண்டும். அந்த அறுதிப் பெரும்பான்மையைப் பெறக்கூடிய நிலை இன்று நாடாளுமன்றத்தில் இல்லை.

எனவே, வடக்கையும் கிழக்கையும் இணைக்காமல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாகவே பேசவேண்டும். - எனத் தெரிவித்தார். (ம)

## எல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்தபா நேற்று பிற்பகல் அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறியிடம் கையளித்தார்.

இந்த வர்த்தமானி அறிவித்தல் தாமதமானமையாலேயே உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படாமல் நீண்ட காலம் இழுபட்டு வந்தது.

பெரும் இழுபறிக்கு மத்தியிலேயே இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகின்றது என்பதும் -

வர்த்தமானியில் பிரசுரமாகவிருக்கும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் சிறுபான்மை இன மக்களின் கட்சிகள் கடுமையாக எதிர்த்து வருகின்றன என்பதும் - தெரிந்தவையே (உ)

## கேப்பாபிலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

முல்லைத்தீவு கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு அறவழிப் போராட்டம் 18ஆவது நாளாக எந்த முடிவுமின்றி தொடர்வது மனவருத்தம் தருகிறது.

முல்லைத்தீவு கேப்பாபிலவு பிலக்குடியிருப்பில் வான் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள 84 குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகள் விடுவிக்கப்பட வேண்டுமென 18 நாட்களாக மக்கள் அறவழிப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதேவேளை புதுக்குடியிருப்பின் மையப்பகுதியில் பிரதேசசெயலகத்தின் முன்னால்உள்ள இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள 19 ஏக்கர் காணி விடுவிக்கப்பட வேண்டுமென 14 நாட்களாக மக்கள் அறவழிப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தம் சொந்த நிலங்களில் கால் பதிக்கும் வரை நகரப்போவதில்லை என இம்மக்கள் மிக உறுதியாக இருப்பது எல்லாவகையிலும் நீதியானதும் நியாயமானதுமாகும். 30 ஆண்டு கால கொடிய போர் முடிவடைந்து 7 ஆண்டுகளுக்கு மேலாகியும் நல்லெண்ண அரசு தாமாகவே செய்திருக்க வேண்டிய ஒரு பணியை மக்கள் அறவழிப் போராட்டம் நடத்தி 17 நாட்களாகியும் அரசு எந்த கவனமும் இன்றி இருப்பது கண்டிக்கதக்கது. இதற்கான தீர்வினைக் காண்பது தலை போகிற காரியமல்ல. நல்லெண்ண அரசு உடனடியாகவே இப்பிரச்சினைக்கு முடிவு காண விரைந்து செயற்பட வேண்டும் என அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் பேரால் அரசிற்கு அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

இலங்கையின் அனைத்து மறை மாவட்டங்களையும் சேர்ந்த ஆயர்களும் கூடவுள்ள இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின்அமர்வில்பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி இது பற்றி விரிவாகப் பேசி தீர்வு ஒன்றை அடைய நிகழ்ச்சி நிரலில் நேரம் ஒதுக்கும்படி நாம் ஏற்கனவே வேண்டி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. யாழ் மறைமாவட்டத்தில் நடந்தேறிய மேயப்புப்பணி மகாநாட்டிலும். போரினால் காணமற்போனோர் மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாம் கூறியமையை இங்கு நினைவூட்ட விரும்புகிறோம். நல்லதீர்வைவிரைவில் அடைய இறையாசீர் வழி நடத்துவதாக. - என்று உள்ளது.

## ஏமாந்தார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பிலான பிரேரணைகளுக்கு சர்வதேச நீதிபதிகள், வழக்கறிஞர்களின் பங்களிப்புடன் கூடிய ஒரு கலப்புப்பொறிமுறை அமையவேண்டும் என்று அந்தக் கவுன்ஸிலில் இலங்கையும் சேர்ந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றது.

அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரண்டு ஆண்டுகள் முடியப்போகின்றன. மேலும் ஒன்றரை ஆண்டுகள் கால அவகாசம் கோருவதற்கு இலங்கை இம்முறை முயலப்போகின்றது. அதன் ஊடாக இலங்கை அரசு சாதித்துக் கொள்ள முயல்வது என்ன?

இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் தொடர்பான அலுவலகத்துக்குப் பொறுப்பான முன்னாள் ஜனாதிபதி, யுத்தக் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளே தேவையற்றவை என்று கூறியிருக்கின்றார்.

இதற்கு முன்னர் நாட்டின் தலைவரான ஜனாதிபதி மற்றும் பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோரும் யுத்தக் குற்ற விசாரணைகளை ஏற்கப் போவதில்லை என்று கூறியிருக்கின்றனர்.

இப்படி யுத்தக் குற்ற விசாரணையே நடத்தக் கூடாது என்று ஒற்றைக் காலில் அரசுத் தலைமை நின்று கொண்டு – ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஏற்னவே முன்னெடுத்த தீர்மானத்தையே ஒருபுறம் அடியோடு நிராகரித்துக் கொண்டு – மறுபுறம் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த மேலும் ஒன்றரை வருடங்கள் கால அவகாசம் நீடிக்கக் கோருகின்றமை ஏன்?

ஏற்கனவே இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் மேலும் ஒன்றரை, இரண்டு வருடங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டு, காலம் இழுத்தடிக்கப்படுமானால் எமது பிரச்சினைகளும் யுத்தக் குற்றங்களும் நீர்த்துப் போய் காலாவதியானவையாகி விடும். சர்வதேசத்தால் கண்டு கொள்ளப்படாத விடயமாகி விடும்.

அப்படி இருக்கையில் இந்தக் காலநீடிப்புக்கு சம்பந்தர் சம்மதம் தெரிவித்திருக்கிறாராம். அது எப்படி சரியாகும்.

ஏற்கனவே ஓரிரு வாரங்களுக்கு முன்னர் முன் நிபந்தனைகளை அரசு ஏற்றுக்கொள்ளுமானால் கால நீடிப்பை அங்கீகரிக்க முடியும் என்று அவர் கருத்துக் கூறியிருந்தார்.

இப்போது அவர் கால நீடிப்பை வழங்கினால் ஐ.நா. கண்காணிப்புத் தேவை என்கிறார்.

இந்தக் காலநீடிப்புக்கான இணக்கம் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவே அல்ல. அது, அதில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சியின் முடிவு மட்டுமே.

கூட்டமைப்பின் இணைப்புக் குழுக் கூட்டத்தில், இத்தகைய கால நீடிப்பை வழங்கக் கூடாது என எமது கட்சி தெளிவாகக் கூறியிருக்கிறது.

ரெலோவின் செயலாளரும் சில தினங்களுக்கு முன்னர் கால நீடிப்பை வழங்கக் கூடாது என்று கூறியுள்ளார்.

இதேபோன்று புளொட் தலைவர் சித்தார்த்தனும் கால நீடிப்பை தாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெளிவாகக் கூறியிருந்தார்.

ஆகவே, கால நீடிப்புக்கு இணங்குகின்றமை குறித்து சம்பந்தனோ, சுமந்திரனோ பேசுவார்களேயானால் 'அது தமிழரசுக் கட்சி சார்ந்ததாக இருக்கமுடியுமே தவிர, கூட்டமைப்பின் முடிவல்ல என்பது தெளிவு.

இந்த விடயத்தில் அரச தரப்பினர் மீது சம்பந்தன் ஐயா பலத்த நம்பிக்கை வைத்திருந்தார். முக்கியமாக சந்திரிகா அம்மையார் போன்றோர் இந்தப் பிரச்சினையில் அதிகம் ஒத்துழைப்பார் என்று அவர் நம்பியிருந்தார். ஆனால், அவர் கூட யுத்தக் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளே தேவையில்லை எனப் பகிரங்கமாக அறிவித்துவிட்டார்.

புதிய அரசையும், புதிய ஜனாதிபதியையும் கொண்டு வந்தமையில் சம்பந்தன் பெரும்பங்காற்றி இருக்கின்றார். அதனை தென்னிலங்கையினரே மீண்டும் மீண்டும் கூறி வருகின்றனர்.

ஆனால், இன்று அவரது சகல கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது நிராகரிக்கப்பட்டுவிட்டன. அரசு, தான் விரும்பிய வகையில் செயற்பட்டு வருகின்றது. இதனால் இவற்றில் எந்த விடயங்களையும் கையாள முடியாத சூழ்நிலை சம்பந்தருக்குத் தோன்றியிருக்கின்றது.

எனவே, ஒன்றில் சம்பந்தன், அரசினால் ஏமாற்றப்பட்டிருக்கின்றார். அல்லது தனது சாணக்கியத்துடன் அவர் முன்னெடுத்த இராஜதந்திர நடவடிக்கைகள் எல்லாம் தோற்றுப்போய் விட்டன.

இப்போது, யுத்தக் குற்ற விசாரணை விடயங்கள் உட்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு கால நீடிப்பை கோருவது, அரசு தன்னைப் பாது காத்துக் கொள்ளவே என்பது வெளிப்படையானது.

எனவே, இவ்வாறான சூழலில் இலங்கை தொடர்பான விடயத்தை ஐ.நா. பொதுச் சபைக்கு கையளித்து அதன் மூலம் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு அதனைப் பாரப்படுத்துவதற்கு நாம் முயலவேண்டும். அதுவே, தமிழர் தரப்பு முயற்சியாக இருக்க வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை.

எனவே, மீண்டும் கால அவகாசம் வழங்கி, இலங்கையைப் பாதுகாக்கும் முயற்சிக்கு உதவப் போவதை விடுத்து, சர்வதேச குற்றவியல் நீதி விசாரணைக்கு அழுத்தம் கொடுங்கள். அப்படி விசாரணை நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்டால்தான் உண்மை வெளியாகும்.

ஆகவே, கால நீடிப்பு பிரேரணைக்கு மாற்றாக இலங்கை விடயத்தையும் ஐ.நா. பொதுச் சபைக்கு கையளிக்க வைக்கும் எத்தனங்களில் தமிழர் தரப்பு ஈடுபட வேண்டும் – என்றார்.

## தமிழரசுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இந்தப் பகிரங்கக் கோரிக்கையை விடுத்தார் அவர். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:–

புதிய அரசமைப்புத் தயாரிப்பு தொடர்பான இடைக்கால அறிவிப்பு டிசெம்பர் 10ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு வரும், அங்கு விவாதிக்கப்படும் என்று முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனால், அது நடக்கவில்லை.

அந்த விடயம் குறித்து தங்களது கட்சிக்குள் தாங்கள் பேசவேண்டும் என்று ஜே.வி.பி. கேட்டதால் அது அப்போது ஒத்தி வைக்கப்பட்டது.

பின்னர் ஜனவரி மாதம் அது கொண்டு வரப்படுவதாக இருந்தது. ஆனால், அவ்விடயம் குறித்து தாங்கள் தங்களது கட்சிக்குள் விவாதிக்க வேண்டி இருப்பதாக அப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூறியது. அதனால், அது அப்போது ஒத்தி வைக்கப்பட்டது.

இப்போது பெப்ரவரியில் அது நாடாளுமன்றுக்கு வரும் என்கின்றார்கள்.

இந்த விவகாரம் குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ் முற்போக்கு முன்னணி, ஜே.வி.பி. போன்றவை எல்லாம் தங்களது கட்சிக்குள் விரிவாக விவாதம் நடத்தியுள்ளன; ஆராய்ந்துள்ளன.

இவ்விடயம் தொடர்பான பிரதான தரப்புத் தமிழர்கள்தான். ஆனால், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யவும் தமிழரசுக் கட்சியோ அல்லது தமிழ்க் கூட்டமைப்போ இவ்விடயம் குறித்து உட்கட்சி விவாதங்களையோ ஆராய்வுகளையோ முன்னெடுக்கவில்லை.

இதில் என்னென்ன விடயங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்பது அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்களுக்கோ, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ, மாகாண சபை உறுப்பினர்களுக்கோ கூடத் தெரியப்படுத்தப்படவில்லை என்பது மிகக் கவலையான விடயம்.

இந்தப் பின்புலத்தில் வடக்கு – கிழக்கு இணைப்பு இல்லை என்று அரச உயர் மட்டத்தில் திட்டவட்டமாகக கூறப்படுகின்றது; உறுதியாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனை சம்பந்தன், சுமந்திரன் போன்றோரும் கூறியிருக்கின்றனர்.

அதேபோன்று ஒற்றையாட்சி நிலைப்பாட்டிலே மாற்றமில்லை என்பதையும் இலங்கை அரசின் சகல் தரப்புகளும் தெளிவாகக் கூறியிருக்கின்றன. சம்பந்தனும் சுமந்திரனும் கூட அத் தகவலை வெளியிட்டிருக்கின்றனர். அவர்களும் ஏற்றுக்கொண்டும் இருக்கின்றனர்.

அதேபோன்று பௌத்தத்துக்கு முன்னுரிமை போன்ற விடயங்களையும் ஏற்றுக்கொண்டு இருக்கின்றனர்.

ஆனால், இந்த முடிவுகளை சம்பந்தனோ சுமந்திரனோ அறிவிக்கின்ற போது அவற்றை கூட்டமைப்பின் முடிவாகக் கருதக் கூடாது.

இந்த முடிவுகள் எடுக்கப்படுகின்ற போது அதில் அங்கம் வகிக்கும் எங்கள் கட்சியையோ அல்லது ஏனைய கட்சிகளையோ அழைத்துப் பேசுவதில்லை.

கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வடக்குக் கிழக்கு இணைப்பு வேண்டும், பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்க முடியாது என்றும் சொல்லியிருக்கின்றோம். ஆனால், இவை எவையும் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

ஒற்றையாட்சியை ஏற்றுக் கொள்கின்ற வகையில் அமையப்பெறும் அரசமைப்பை எமது கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ். நிராகரிக்கின்றதென்பதையும் தெளிவாகக் கூறுகின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான விடயங்களாக இருக்கலாம். அல்லது அரசமைப்புச் சார்ந்த விடயங்களாக இருக்கலாம். இந்த விடயங்களில் முடிவுகளை சம்பந்தன், சுமந்திரன் என ஓரிருவர் சார்ந்து எடுப்பது தமிழ் மக்களுடைய எதிர்காலத்தைப் பாதிக்கின்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றது.

ஆகவே நாங்கள் ஒரு கோரிக்கையை சம்பந்தரிடம் முன்வைக்கின்றோம். தயவு செய்து நீங்கள் எடுக்கின்ற முடிவுகளை தமிழரசுக் கட்சி முடிவுகளாக எடுங்கள். அதனைக் கூட்டமைப்பின் முடிவாகத் தெரிவிக்காதீர்கள். மேலும் கூட்டமைப்புடன் கலந்து பேசாது அவ்வாறான முடிவுகளை எடுப்பது தவறான நடவடிக்கை என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்.

மக்களைப் பாதிக்கும் பல முடிவுகளை கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளுடன் பேசாது, அவை கூட்டமைப்பின் முடிவுகள் என வெளியே சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கால அவகாசம் வழங்கும் விடயத்தை முழுமையாக நிராகரிப்பதுடன் அதனை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் அது அரசைப் பாதுகாப்பதாகவே அமையுமென்பதையும் கூறி அவரிடம் அதனையும் கோரிக்கையாக முன்வைக்க விரும்புகின்றோம். – என அவர் மேலும் தெரிவித்தார்.

## விக்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகமாகவே, அரசாங்கம் அரசமைப்பில் சமஷ்டியைக் கொண்டுவர முயல் வதாகவும் அவர் குற்றம் சாட்டினர்.

பத்தரமுல்லையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:–

ஆட்சி மாற்றத்தின் பின்னர் அரசமைப்பில் திருத்தங்கள் சில கொண்டு வரப்பட்டன. ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது, ஜனாதிபதி வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன, அரசியலமைப்பு சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுவது, மக்களுக்காக வேண்டியே தவிர பிற அரசியல் இலாபங்களுக்காக அல்ல எனத் தெரிவித்தார். அந் நேரத்தில், அந்தப் பிரசாரம் வரவேற்கத்தக்கதாக காணப்பட்டது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிகள் குழுவினர் சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற, சமஷ்டி ஆட்சி முறைக்கு ஒப்பான வகையில் அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு, நாட்டைச் சீரழிக்க முற்படுகின்றனர்.

அரசமைப்பில் திருத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில், மக்களால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் பல உள்ளன. அவற்றையெல்லாம் விடுத்து, சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியையும் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு வழங்கிய வாக்குறுதியையும் நிறைவேற்றும் வகையிலான திருத்தங்களையே முன்னெடுக்க அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

விக்னேஸ்வரன் கூறும் பேச்சுக்கு மறுபேச்சு இந்த அரசாங்கம் பேசுவதில்லை. அவர் கூறும் விடயங்களுக்கு எல்லாம் தலையாட்டுகிறது இந்த அர சாங்கம்.

இந்நாட்டில் சில்லறைப் பிரச்சினைகள் பல உள்ளன. அவற்றுக்கு எல்லாம் ஆட்சி மாற்றத்தின் மூலம் தீர்வைப் பெற்றுவிடலாம். ஆனால், முறை யற்ற அரசமைப்பு திருத்தங்களைக் கொண்டு வந்தால் அதனால் ஏற்படும் விளைவிலிருந்து நாட்டை மீட்டெடுக்க முடியாது . – என்றார்.

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலும் பேரவையில் ஒருகாலும் வேண்டாம்' என ஈ.பி.ஆர்.எல்.எவ். உட்பட சகல கட்சிகளிடமும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் வெளியிட்ட கோரிக்கை நேற்று ஊடகங்களில் வெளியாகியிருந்தது.

அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் நேற்று தமது பத்திரிகையாளர் மாநாட்டிலேயே சுரேஷ் கருத்து வெளியிட்டார். அப்போது அவர் கூறியவை வருமாறு :–

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் பிழையாக வழிநடத்தப்படுமானால் அதற்கு முழுப் பொறுப்பும் சம்பந்தனே.

தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்ட போது, அதனை ஆரம்பிக்கும் தரப்புகளுள் நாமும் ஓர் அங்கத்துவக் கட்சியாக இருந்தோம். அதன் உருவாக்கதிலும் இன்று வரையான அதன் செயற்பாட்டிலும் எமது பங்களிப்பு இருக்கின்றது.

பேரவை என்பது இன்று வரை ஓர் அரசியல் கட்சியல்ல. அது ஓர் அழுத்தக் குழுவே. அவ்வாறே தொடர்ந்தும் செயற்படும் என இணைத் தலைவர்களால் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

ஆகவே, அரசும் சரி, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடியவர்களும் சரி, மக்கள் நலன்சார்ந்த விடயங்களில் என்ன முடிவை எடுக்கவேண்டும் என்பதைத் தமிழ் மக்கள் பேரவை ஊடாக நாங்களும் அழுத்தக்குழுவாகச் செயற்பட்டு வழிப்படுத்தி வருகின்றோம்.

அதேநேரம், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்பது மக்களால் தெரிவு செய்யப்பட்ட அமைப்பாக இருக்கின்றது. அது ஆரம்பிக்கப்பட்டு நீண்ட காலம். ஆனாலும் அந்த அமைப்புக்குள் நிறைய முரண்பாடுகள் இருக்கின்றன என்பது உண்மையே. அதனைக் கூட்டமைப்பிற்குள் இருந்தபடியே மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

நாங்கள் அனைவரும் ஐக்கியப்பட்டுச் செயற்படவேண்டும் என்ற பொதுவான அபிப்பிராயம் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு. அதனைப் பின்பற்றி நின்றோம்.

அந்த ஒற்றுமைக்கு அமைவாக சம்பந்தன் கேட்ட கால அவகாசம் 2016 இறுதிதான். அதற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும், அதுவரை ஒற்றுமையாக இருங்கள் எனக் கேட்டார். கால அவகாசம் வழங்கப்பட்டது.

ஆனால் விடயம் ஒப்பேறவில்லை. இந்த விவகாரத்தில் அவர் மட்டும் ஏமாற்றப்படவில்லை. ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் ஏமாற்றப்பட்டுள்ளனர். தமிழ் மக்களின் வாக்குகளை வாங்கி ஆட்சிக்கு வந்தவர்களால் தமிழ் மக்களின் சகல கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

போராட்டம் நடத்தும் நமது மக்களைப் பார்த்து, தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் – அமைச்சர்களைப் போன்று – கொழும்புவாருங்கள் என அழைக்கின்றனர். அதனைப் பார்க்கும்போது துணிச்சல்மிக்கவர்கள் போலத்தான் தோன்றுகின்றது. ஆனால் அவர்கள் உண்மையில், அரசின்பால் நின்று போராட்டங்களைக் குழப்புகின்றார்களேயன்றி வேறில்லை.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சியினர் தாங்கள் இராஜதந்திர ரீதியில் பேசுகின்றனர், விடயங்களைக் கையாளுகின்றனர் என்று கூறி வந்தனர். ஆனால் உண்மையில் இவர்கள் ஏமாந்துவிட்டார்கள் அல்லது தோற்றுப் போய்விட்டார்கள் என்றவாறான சூழல் ஏற்பட்டிருக்கின்றது. கூட்டமைப்பின் உருவாக்கத்தில் எங்கள் ஒவ்வொருவருக்கும் பங்குண்டு. கூட்டமைப்பிலிருந்து வெளியேற வேண்டியவர்கள் யார் என்ற கேள்வி எழுகின்றது.

கூட்டமைப்பைப் பிழையான பாதைக்குக் கொண்டு செல்பவர்கள் வெளியேறுவதா? அல்லது கூட்டமைப்பில் இருக்கக் கூடிய ஏனையோர் அவர்களை விட்டு வெளியேறுவதா என்பதே கேள்வி.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாகப் பிழையாகக் கையாளப்படுமாக இருந்தால் கூட்டமைப்பைச் சின்னாபின்னப் படுத்துவதற்கான மூலகர்த்தாவாக சம்பந்தனே விளங்குவார் என்ற நிலையை அவர் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றார் என நான் நினைக்கிறேன்.

கூட்டமைப்பை இனிமேலாவது சரியான பாதையில் – ஜனநாயகப் பாதையில் – வழிநடத்துவதற்கு அவர் முயற்சிக்க வேண்டும். அதற்கான திட்டவட்டமான முடிவுகளை, சரியான காலகட்டத்தில் எல்லோரும் சேர்ந்து எடுக்க வேண்டும். – என்றார்.

# மடுக்கரை - நானாட்டான் வரையான வீதியை விரைவில் திருத்தி அமைக்க நடவடிக்கை

## ஒரு கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

மடுக்கரையில் இருந்து நானாட்டான் வரையான வீதியை விரைவில் சீர்செய்து வழங்குமாறு வீதி அபிவிருத்தித் திணைக்கள நிறைவேற்று பொறியியலாளருக்கு வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்ட பின்னரே இந்த உத்தரவை அவர் விடுத்துள்ளார்.



நானாட்டான் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் அருட்சகோதரர் கு.இ.விஜயதாசன், வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரனிடம் இந்த வீதிப் பிரச்சினைகள் தொடர்பாகத் தெரிவித்தார்.

இதனையடுத்து அமைச்சர் அங்கு சென்று பார்வையிட்டு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்போது அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

மடுக்கரையில் இருந்து நானாட்டான் வரை 8 கிலோ மீற்றர் நீளமான வீதி காணப்படுகின்றது. இதில் 5 கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழும் 3 கிலோமீற்றர் வீதி உள்ளூராட்சி சபையின் கீழும் உள்ளன.

இந்த வீதி மக்களின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நகரத்துக்கு வரும் பிரதான வீதியாகவும் காணப்படுகின்றது.

இதில் 2 கிலோமீற்றர் வீதிகள் தார் இடப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள வீதிகள் குண்டும் குழியுமாக மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

அங்கு சேவையில் ஈடுபட்டுவந்த இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் கடந்த ஒரு வாரகாலத்துக்கு மேலாக சேவையை இடைநிறுத்தியிருந்தன. பேருந்து சேவை நிறுத்தப்பட்டமையால் மடுக்கரை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்தன.-என்று தெரிவிக்கப்பட்டது.

வடமாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் தமது 2017 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் முதலமைச்சர் உட்பட 38 மாகாண சபை உறுப்பினர்களுக்கும் தனக்கும் கிடைத்த நிதியிலிருந்து தலா 50 லட்சம் ரூபா வீதி அபிவிருத்திக்காக ஒதுக்கியிருந்தார். அத்துடன், மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி பிரிமூஸ் சிராய்வா மற்றும் வைத்தியர் குணசீலன் ஆகியோர் தமக்குக் கிடைக்கப்பெற்ற நிதி தலா 50 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளனர்.

மொத்தமாக ஒரு கோடி ரூபா இந்த வீதியைச் செப்பனிடுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

# மண்டைதீவு விவசாயிகளுக்கு நெற்பயிர் அழிவுக்கான நஷ்டஈடு

## தீவக விவசாய திணைக்களப் பகுதி பதிவுகளை மேற்கொண்டு வருகிறது

மண்டைதீவு, பெப்.18

மண்டைதீவு விவசாயிகளுக்கு நெற்பயிர் அழிவுக்கான வறட்சி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அண்மையில் மண்டைதீவுப் பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக மானியத்துக்குப் பதிவுகளைமேற்கொண்டிருந்த விவசாயிகளிடம் விவரம் பெறப்பட்டுள்ளது.

மண்டைதீவில் நெல் விதைப்பு நடந்த பகுதிகளான தில்லை குடாப் பகுதி, சானகன் வயல் தவிர்ந்த ஏனைய பகுதி, பறையம் புது வயல், ஊரி வயலின் சில பகுதி கம்பன்புலம் போன்ற பகுதி விவசாயிகள் நட்டம் கோரி பதிவுகளைமேற்கொண்டுள்ளனர்.

மண்டைதீவில் தெற்கே கிராஞ்சிக் குளம் சார்ந்தவயல் வெளிகள் குளத்தில் இருந்து நீர் பம்பிகள் மூலம் இறைப்புக்களை மேற்கொண்டு இருந்ததால் கதிர்கட்டி இருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர். (ஐ-20)

# பொது இடங்களில் கழிவுகளை கொட்டினால் சட்ட நடவடிக்கை

## யாழ். மாநகர சபை எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது இடங்களில் குப்பை கூளங்களைக் கொட்டுவோர் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

-இவ்வாறு யாழ். மாநகர சபையினர் ஒலிபெருக்கி மூலம் வீதி வீதியாகச் சென்று இந்த அறிவிப்பை விடுத்து வருகின்றனர். குப்பை மற்றும் கழிவுகளை அகற்றும் வாகனங்களையும் உடன் கொண்டு செல்வதையும் காணமுடிகிறது.

இதேவேளை, மாநகர சபையின் வாகனங்கள் ஒவ்வொரு வீதிகளுக்கும் சென்று கழிவுகளைச் சேகரித்து வருகின்றன. இதற்கெனக் குறிப்பிட்ட நாள்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த நிலையில் பொதுமக்கள் கழிவகற்றல் தொடர்பில் அசண்டையாகவே இருக்கின்றனர் என்று மாநகர சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

கழிவகற்றலுக்கு உரிய வழிவகைகள் செய்து கொடுக்கப்படுகின்ற போதும் மக்கள் இந்த விடயத்தில் கவனம் எடுக்காது வீதியோரங்களில் குப்பைகளைக் கொட்டுகின்றனர் என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வீதியோரங்களில் குப்பைகள் கொட்டுவோர் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-20)

# தனுஷ்கோடியில் இலங்கைப் படகு!



கைவிடப்பட்ட நிலையில் இருந்த இலங்கையின் படகு ஒன்றைத் தமிழக கரையோரப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

தனுஷ்கோடிக்கு அப்பால் 6 கடல்மைல் தூரத்தில் இந்தப் படகு கைப்பற்றப்பட்டுள்ளது.

கண்ணாடி இழையிலான இந்தப் படகு நேற்று முன்தினம் மாலை குறிப்பிட்ட இடத்தில் காணப்படுவதாக மீனவர்கள் வழங்கிய தகவலை அடுத்தே அது கைப்பற்றப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

18 அடி நீளம் மற்றும் 6 அடி அகலம் கொண்ட இந்தப் படகில் ஓஎப்ஆர்பி- ஏ 4044-என்பிஓ என்ற பதிவு இலக்கம் பொறிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

அதில் இருந்து மீன்பிடி வலைகள், 10 லீற்றர் மண்ணெண்ணெய் என்பன கைப்பற்றப்பட்டன.

அந்தப் படகு விபத்தில் சிக்கியிருக்கலாம் என்ற சந்தேகம் தற்போது எழுப்பப்பட்டுள்ளது. அத்துடன் அந்தப் படகு ஏதாவது கடத்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கலாமா? என்ற கோணத்திலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (எ)

# கிராமப் பாடசாலைகளைத் தரம் உயர்த்துவது எங்கள் எல்லோரதும் கடமைகளில் ஒன்று

## சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.18

கிராமங்களில் உள்ள பாடசாலைகளையும் தரம் உயர்த்தி மாணவர்களது கல்வியை அபிவிருத்தி செய்வது எங்கள் எல்லோரதும் கடமைகளிலும் ஒன்றாகும்.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் மெய்வன்மைப் போட்டி அதிபர் நா.மகேந்திரராசா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.



இந்த நிகழ்வில் அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தங்களுடைய குழந்தைகளை நகரப் பாடசாலைகளில் சேர்ப்பதற்கே தற்போது பெற்றோர் விரும்புகின்றனர்.

இந்த நிலை மாறவேண்டும். உங்களுடைய அயற் பாடசாலையை சிறப்புறச் செய்ய வேண்டும். ஆகவே, நீங்கள் உங்கள் அயற் பாடசாலைகளில் உங்கள் பிள்ளைகளை அனுமதியுங்கள். அப்போது தான் நாங்கள் கிராமப் பாடசாலைகளை முன்னேற்ற முடியும்.

குடாநாட்டில் மிகச் சிறந்த நிலையில் இருந்த எங்களுடைய கல்வி இன்று பின்னடைவுக்குச் சென்றிருக்கின்றது. கிராமப் பாடசாலைகளின் தரத்தை உயர்த்துவது எங்கள் எல்லோருடைய கடமையாகும்.

பெற்றோர் தங்களுடைய குழந்தைகள் வருங்காலத்தில் சிறப்பாக வரவேண்டும் என்று எதிர் பார்ப்பதை நாங்கள் தவறு என்று கூறமுடியாது. பெற்றோர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய குழந்தைகளின் சிறப்பான வாழ்வுதான் தங்களுடைய வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டவர்கள். இருந்தாலும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவன் என்கின்ற ரீதியல் குடாநாட்டில் இருக்கக் கூடிய மற்றைய அனைத்துப் பாடசாலைகளின் தரத்தையும் உயர்த்த வேண்டியது எமது கடமையாகும்.

நாங்கள் அனைவருமாக கிராமப்புற பாடசாலைகளின் தரத்தை உயர்த்துவதுடன், நகரப் பாடசாலைகளின் தரத்தைப் பேணிப் பாதுகாப்பதும் எங்களுடைய கடமையாகும்.- என்றார். (ஐ)

# கேப்பாபிலவு போராட்டத்துக்கு ஆதரவு தர திரண்டவர்கள்




தென்னிலங்கையில் இருந்து நேற்று வந்த மதகுருமார்






கிழக்கு பல்கலை மாணவர்கள், இடதுசாரி கட்சியினர் மற்றும் அருட்தந்தையர்கள் (விரிவான செய்தி 2ஆம் பக்கத்தில்)





மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன், ரெலோ அமைப்பின் கொள்கை பரப்புச் செயலாளரும் சிவம் பவுண்டேசன் நிறுவனத்தின் தலைவருமான வேலாயுதம் கணேஸ்வரன் மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவினர்.

## போராட்டத்துக்கு மத்தியிலும் நேற்றிரவு கல்வி நடவடிக்கை




## கேப்பாபிலவுப் போராட்டம் நியாயமானது: தெற்கு மக்களுக்குத் தெளிவுபடுத்துவோம்

### ஜனாதிபதிக்கும் கூறுவோம் என்கிறார் வண.பத்தேகம தேரர்

முல்லைத்தீவு, பெப்.18

முல்லைத்தீவு – கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு மக்களுடைய போராட்டம் அரசியல்பிரச்சினை அல்ல. அது மக்களின் பொதுப் பிரச்சினை. இதைத் தென்னிலங்கை மக்களுக்குத் தெரியப் படுத்துவதுடன் ஜனாதிபதிக்கும் தெரியப்படுத்துவோம் என தென் மாகாண சபை உறுப்பினர் வண. பத்தேகம சுமந்திர தேரர் தெரிவித்தார்.

ஆனால் காணிகளைப் பெற்றுத்தருவோம் என்று எம்மால் உறுதியாகக் கூற முடியாது என்றும் அவர் தெரிவித்தார். நேற்று கேப்பாபிலவுக்குச் சென்று அங்கு போராட்டத்தில் ஈடுபடும் மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட பின்னரே அவர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் தென் மாகாண சபை உறுப்பினர் வண. பத்தேகம சுமந்திர தேரர் தலை மையில் இரு தேரர்கள், வண.பிதா அன்டனிசவரிமுத்து, வண.பிதா டேவிட், மௌலவி அய்க் எம். ஐ. பரீத் ஆகியோர் அடங்கிய மதகுருமார் நேற்று மாலை கேப்பாபிலவுக்குச் சென்றனர்.

சிவன் அறக்கட்டளை நிறுவனத் தலைவரும் ரெலோ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளருமான கணேஸ்வரன் வேலாயுதமும் அவர்களுடன் சென்றார். போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் யாதார்த்த நிலையை தென்னிலங்கை மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

தென் மாகாண சபை உறுப்பினர் வண.பத்தேகம சுமந்திர தேரர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

யுத்தத்தின் போது யாருமே வெற்றி பெறவில்லை. போரினால் பாதிக்கப்பட்டவர்கள் தெற்கிலும் வடக்கிலும் உள்ளனர். உங்கள் பிரச்சினைகளை தென்னிலங்கை மக்களுடன் பகிர்ந்து கொள்வோம்.

இது காணிப்பிரச்சினை, அரசியல்பிரச்சினையோ, சமூகப்பிரச்சினையோ அல்ல. இது பொது மக்களுடைய பிரச்சினையாகும். இது நியாயமான கோரிக்கை. இந்தக் கோரிக்கைகள் தொடர்பாகத் தென்னிலங்கை மக்களுக்கு பெரியளவில் தெரியாது. –என்றார். (மு)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள இவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.